Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 305

ஞாயிற்றுக்கிழமை
28 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## அரச வரி வருமானம் சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, செப். 28
நடப்பு ஆண்டில் அரசாங்கத்தின் வரி வருமானம் எதிர்பார்த்ததை விடவும் அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
அதன் பிரகாரம் இந்த ஆண்டின் 14

காற்றாலைக்கு எதிராகப் போராடிய

# பொதுமக்கள் மீது கொடூரத் தாக்குதல்

## மன்னாரில் பொலிஸார் அராஜகம் இரவிரவாக பெரும் பதற்றம்

மன்னார், செப்ரெம்பர் 28

மன்னாரில் காற்றாலைகளுக்கு எதிராகவும், கனிய மணல் அகழ்வுக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் கொடூரத் தாக்குதல்களை நடத்தியதால், அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. 14

## நிறைவேற்று அதிகாரம் இலங்கைக்கு அவசியம்

சட்டக் கல்லூரியின் முதல்வர் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 28
இலங்கையின் இயல்புகளைக் கருத்திற்கொள்ளும்போது நிறைவேற்று அதிகாரம் மிகவும் அவசியமானது என்று இலங்கை சட்டக் கல்லூரியின் 14

2026ஆம் ஆண்டு பட்ஜெட்

## நிதி அமைச்சுக்கே அதிகளவான நிதி!

பாதுகாப்பு அமைச்சுக்கு ரூ.455 பில்லியன்

கொழும்பு, செப். 28
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின், 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில், உச்சபட்சமாக நிதி அமைச்சுக்கு 618 பில்லியன் ரூபாவும், பாதுகாப்பு அமைச்சுக்கு 455 பில்லியன் ரூபாவும் 14

## அநுரகுமாரவின் அரசுக்கு பொய்கள்தான் கொள்கை

சஜித் நேற்றுக் காட்டம்



கொழும்பு, செப். 28
ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் 24 மணிநேரமும் பொய்களைப் பரப்புகின்றது. பொய்களையே கொள்கையாகக் கொண்டிருக்கின்றது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விமர்சித்துள்ளார்.
பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி 14



தமிழகத்தில் துயரம்

## விஜய்யின் பரப்புரையில் 38 பொதுமக்கள் பலி!

சென்னை, செப். 28
தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நேற்று முன்னெடுத்த தேர்தல் 14

செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட

## சிறுவர் என்புத்தொகுதிகளுக்கு நீதிகோரி நீடிக்கப்பட்டது உணவுத் தவிர்ப்புப் போர்


யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 28
செம்மணியில் இடம்பெற்றுவரும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம், சிறுவர்தினமான ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட சிறுவர்களின் என்புத் தொகுதிகளுக்கு நீதிகோரியே இந்த 14



**முச்சந்தி முரளி**

'திசைகாட்டி அரசாங்கம் முழுசா சந்திரமுகியா மாறிட்டுது எண்டதுக்கு மன்னார் தான் சாட்சி கண்டியளோ'

# சஞ்சீவி




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 27.09.2025 | திகதி 27.09.2025 | திகதி 27.09.2025 | திகதி 27.09.2025 | திகதி 27.09.2025 | திகதி 27.09.2025 | திகதி 27.09.2025 | திகதி 27.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4207 | சீட்டிழுப்பு இலக்கம் 1274 | சீட்டிழுப்பு இலக்கம் 0233 | சீட்டிழுப்பு இலக்கம் 2313 | சீட்டிழுப்பு இலக்கம் 5965 | சீட்டிழுப்பு இலக்கம் 1995 | சீட்டிழுப்பு இலக்கம் 0540 | சீட்டிழுப்பு இலக்கம் 0081 |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கினம் விருச்சிகம் | ஆங்கில எழுத்து M | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து I | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கினம் மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் 21 33 72 73 | வெற்றி இலக்கங்கள் 06 12 14 38 | வெற்றி இலக்கங்கள் 3 0 2 3 | சுப்பர் இலக்கம் 25 | வெற்றி இலக்கங்கள் 4 7 4 3 1 8 | வெற்றி இலக்கங்கள் 12 34 49 50 | வெற்றி இலக்கங்கள் 4 3 1 8 | வெற்றி இலக்கங்கள் 16 22 25 39 |
| விசேட எழுத்து J | | | வெற்றி இலக்கங்கள் 03 11 30 52 | | விசேட எழுத்து I | | |

# தையிட்டி விகாரை விவகாரம் அலசி ஆராயப்பட்டே தீர்வு!

*அமைச்சர் ஹினிதும தெரிவிப்பு*

**கொழும்பு,செப்.28**

**யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரை காணிப்பிரச்சினைக்கு உண்மை நோக்கத்துடன் தீர்வு காண்பதற்கு எடுத்த நடவடிக்கைகளை முதலில் ஆராய வேண்டும். இந்தப் பிரச்சினை உடன் தீர்வு காணும் தன்மை கிடையாது. நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலையீட்டின் ஊடாக தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம் என புத்தசாசன மற்றும் மதவிவகாரங்கள், கலை கலாசாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- தையிட்டி திஸ்ஸ விகாரையின் காணி தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகிறது. இந்தப் பகுதியில் இடம்பெறும் போராட்டங்கள் குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தப் போராட்டங்கள் குறித்து அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக ஏதும் அறிவிக்கப்படவில்லை. இந்த விகாரை அமையப்பெற்றுள்ள காணி, காணி அமைச்சினால் கைப்பற்றப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. காணி அரசுடமையாக்கல் சட்டத்தின் பிரகாரம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத காரணத்தால் அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லை.

இந்தக் காணி தமக்குரியது என்று போராடும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம். யாழ்.மாவட்ட சிவில் சமூகத்தினருடனும் கலந்துரையாடியுள்ளோம்.

தையிட்டிப் பிரச்சினைக்கு ஒரு இடத்தில் மாத்திரம் தீர்வுகாண முடியாது. புத்தசாசனம் மற்றும் மதவிவகாரங்கள் அமைச்சு, காணி அமைச்சு ஆகிய அமைச்சுகள் ஒன்றிணைந்தே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வுகாணும் தன்மை கிடையாது. நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலையீட்டின் ஊடாக தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 27.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0673 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 4 8 1 1 6 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 27.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2939 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 11 33 37 57 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 27.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 11 28 51 71 |
| வெற்றி வாரம் | 5100 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 27.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0779 |
| வெற்றி இலக்கம் | 14 17 47 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 27.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| மீனம் | |
| வெற்றி இலக்கம் | 08 38 49 52 |
| சீட்டிழுப்பு வாரம் | 4651 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 27.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 38 |
| வெற்றி இலக்கம் | 13 23 63 67 |
| வெற்றி வாரம் | 2115 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 27.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 20 31 51 75 |
| வெற்றி வாரம் | 2765 |

## தியாகதீபம் திலீபன் தமிழரின் வழிகாட்டி

*தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், செப்.28

தியாகதீபம் திலீபன் தமிழ்மக்களுக்குஎதிரானஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடினார். அவர் எமது மக்கள் தாயகத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக அகிம்சை வழியில் தன் இன்னுயிரினைத் தியாகம் செய்தார். அவரின் தியாகம் எமக்கு வழிகாட்டியாகவுள்ளது என்று வலி.கிழக்குப் பிரதேசசபை தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தியாகதீபத்தின் நினைவுகளை எமது மக்கள் வரலாற்று ரீதியில் என்றும் நினைவுகூர்கின்றனர்.

அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த போதும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான அடிப்படைகளில் எவ்வித மாற்றத்தினையும் செய்யவில்லை. இலங்கையில் பௌத்த சிங்களப் பேரினவாதம் அவ்வாறே காணப்படுகின்றது.

இந்த இடத்தில் நாங்கள் ஓர் இனமாக இலட்சியத்தினால் ஒன்றுபட்டவர்களாக சர்வதேசம் ஏற்றுக்கொண்ட எமது சுயநிர்ணய உரிமைக்காக போராடவேண்டியுள்ளது. அதற்குத் தியாகி திலீபன் அவர்களது தியாகம் எமக்கு வழிகாட்டியாகவுள்ளது. அதனைப் பின்பற்றி எமது உரிமைகளை வென்றெடுக்கவேண்டும்- என்றார். (ச-இ)

## இலங்கை - சீனா உறவு ஆழ வேரூன்றிச் செழிப்பு!

கொழும்பு,செப்.28

2000 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான நட்பு இன்றும் ஆழமாக வேரூன்றி செழித்து வருகிறது என இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென் ஹொங் தெரிவித்துள்ளார்.

சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டதன் 76ஆவது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எங்கள் இருநாட்டுத் தலைவர்களும் முக்கியமான முடிவுகளை எட்டினர். இது எமது இருதரப்பு உறவுகளின் வளர்ச்சிக்கு ஒரு புதிய மூலோபாய வழிகாட்டுதலை வழங்கியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். சவால்கள் இருந்த போதிலும், இரண்டு நாடுகளும் பொதுவான இலக்குகளுடன் பிணைக்கப்பட்ட பங்காளிகள் நாம் - என்றார். (ச-இ)

## விளையாட்டுக்கழகங்களை மேம்படுத்த நிதி தாராளம்



*விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு*

கிளிநொச்சி,செப்.28

விளையாட்டுக்கழகங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய நிதியும், வளமும் கையிருப்பில் உள்ளன. எனவே கழகங்களின் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளைத் தரும் பட்சத்தில் அவற்றை நிறைவேற்றமுடியும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமாரகமகே தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல் கிளிநொச்சி திறன்விருத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் மற்றும் விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்கள், தாம் விளையாட்டுத்துறையில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக அமைச்சருக்கு எடுத்துரைத்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அதேவேளை கிளிநொச்சி மாவட்டப் பொதுவிளையாட்டு மைதானத்தின் கட்டடத்தொகுதியில் ஏற்பட்டுள்ள சேதவிவரங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை கிடைத்தால், அதற்கான நிதியைப் பெற்றுத் தரமுடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (க-113)

## திடீர் சுகவீனம்; ஆசிரியர் இறப்பு

தென்மராட்சி,செப்.28

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்பித்த, இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆசிரியர், திடீர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த தருமராசா ஞானகிரி (வயது- 37) என்பவரே இவ்வாறு உயிரழந்துள்ளார்.

ஈரலில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக இறப்பு நிகழ்ந்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், கொடிகாமம் பிரிவு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.தவமலர் விசாரணைகளைக் கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (க-159,9,131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட விரிவுரையாளர் 6 பேர் பேராசிரியர்களாகப் பதவியுயர்வு

யாழ்ப்பாணம்,செப்.28

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் 6 பேர் பேராசிரியர்களாகப் பதவியுயர்வு பெறுவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.**


மருத்துவ பீடத்தின் சத்திரசிகிச்சையியல் துறை மற்றும் உடற்கூற்றியல் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேரையும் கலைப்பீடத்தின் புவியியல் துறை, இந்து கற்கைகள் பீடத்தின் சமஸ்கிருதத்துறை மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகைச் சேர்ந்த ஒவ்வொரு சிரேஷ்ட விரிவுரையாளர்களையுமே பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக்கூட்டம் நேற்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த சத்திரசிகிச்சையியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி, சிரேஷ்ட விரிவுரையாளரும், சத்திரசிகிச்சை நிபுணருமான சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா, உடற்கூற்றியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி துரைரட்ணம் செந்தூரன், புவியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, சமஸ்கிருதத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாள ருமான கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாத சர்மா மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரு மான கலாநிதி சிவநேசன் சபா ஆனந் ஆகியோரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையில் மருத்துவபீடத்தைச் சேர்ந்த சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி சிறுநீரகவியலில் பேராசிரியராகவும், சத்திரசிகிச்சை நிபுணர் சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா சத்திரசிகிச்சையியலில் பேராசிரியராகவும், உடற்கூற்றியல் துறைத் தலைவர் கலாநிதி துரைரட்ணம் செந்தூரன் உடற்கூற்றியலில் பேராசிரியராகவும், புவியியல் துறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா புவியியலில் பேராசிரியராகவும், சமஸ்கிருதத்துறைத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா சமஸ்கிருதத்தில் பேராசிரியராகவும், விளையட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சிவநேசன் சபா ஆனந் உடற்கல்வியியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ச-இ)



பா.பாலகோபி


ம.பாலகைலாசநாதசர்மா


சு.துரைசாமி சர்மா


நா. பிரதீபராஜா


சி.சபா ஆனந்



## சிரேஷ்ட பேராசிரியராக ஜி. திருக்குமரன் பதவியுயர்வு

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் சிரேஷ்ட பேராசியராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.


அதன்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவிக்கு விண்ணபித்த விவசாய உயிரியல் துறையைச்சேர்ந்த பேராசிரியர் ஜி. திருக்குமரன், விவசாய உயிரியலில் சிரேஷ்ட பேராசியராகப் பதவியுயர்வு பெறுவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ச-இ)



## இலங்கை நிர்வாகசேவை வடக்கு விசேட அதிகாரிகள் இந்திய மாநாட்டில் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,செப்.28

'தூய நகரமும் நகர்ப்புற மாற்றத்தை நோக்கிய எதிர்காலமும்' எனும் தொனிப்பொருளில் இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் செப்ரெம்பர் 22ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை இடம்பெறும் மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை நிர்வாக மற்றும் கணக்காளர் விசேட தர முதன்மை அதிகாரிகள் மூவர் இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளனர். அதன்படி வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை நிர்வாகசேவை விசேடதர அதிகாரி வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், இலங்கைக் கணக்காளர் சேவையின் முதற்தர அதிகாரி பிரதம கணக்காளர் ஆ.அகிலன் மற்றும் இலங்கை நிர்வாகசேவையின் விசேடதர அதிகாரியும் உள்ளூராட்சி திணைக்கள மாகாண ஆணையாளருமான திருமதி தேவந்தினி பாபு ஆகியோர் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-இ)



## திலீபனின் தியாகத்துக்காக கண்ணீர் சிந்திய முதியவர்

யாழ்ப்பாணம்,செப்.28

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியடியில், 81 வயதுடைய முதியவர் ஒருவர் கண்ணீர் சிந்தி, மனமுருகி அஞ்சலி செலுத்தினார்.

திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளின் பிரதான நிகழ்வு நல்லூரில் நேற்றுமுன்தினம் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. சாவகச்சேரியைச் சேர்ந்த முதியவர் ஒருவர், தனியாக நீண்டதூரம் பயணித்து வந்து திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினார். 15 நிமிடங்களுக்கு மேலாகத் திலீபனின் நினைவுத்தூபியைப் பார்த்து, மனமுருகிக் கண்ணீர் சிந்தினார். நினைவுத்தூபிக்கு முன்பாகக்கீழே விழுந்தும் வணக்கம் செலுத்தினார். நினைவுத்தூபியில் இருந்த திருவுருவப்படத்தைப் பார்த்து மீண்டும் விம்மி விம்மி அழுதவாறுஅஞ்சலி செலுத்தினார். இந்தக் காட்சி அங்கிருந்தவர்களை மனமுருகச் செய்தது. (க-66)

## காற்றாலைத்திட்டம் வேண்டாம் வவுனியாவில் போராட்டம்

வவுனியா,செப்.28

மன்னார்ப் பகுதியில் நிறுவப்படவுள்ள காற்றாலை மின்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பொலிஸாரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்குக் கண்டனம் வெளியிட்டும் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. மக்கள் போராட்ட இயக்கம் மற்றும் வவுனியாமாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகியன இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அங்கிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்கு பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரங்களை வழங்கிவைத்தனர். (ச-110)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம்
26 . 08 . 1957

மறைவு
24 . 09 . 2025

### கந்தசாமி முத்துக்குமார்

மலேசியா கோலாலம்பூரை பிறப்பிடமாகவும், தொல்புரம் பத்தானையையும், ஜேர்மனியையும் வசிப்பிடமாக கொண்ட கந்தசாமி முத்துக்குமார் அவர்கள் கடந்த (24.09.2025) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - மனோன்மணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வேல்முருகு மற்றும் - கருணாதேவி தம்பதியரின் மருமகனும், மதுனன், கஜவதனி, கயலினியின் தந்தையும், திருச்செல்வம், கனகசூரியர், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (T.K) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (29-09-2025) திங்கட்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
491 573 600 0154
077 632 3881
60 163 712 762

(CS/59506) J-1

## மரண அறிவித்தல்



மலர்வு
01 . 02 . 1957

உதிர்வு
24 . 09 . 2025

### இராசேந்திரம் சிறீஸ்கந்தகுமார்

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், பண்டாரிக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சிறீஸ்கந்தகுமார் அவர்கள் கடந்த 24.09.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவதாசன் மற்றும் கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவந்தி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற துசானி மற்றும் விபூசணன் (லண்டன்), வித்தகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாயிஸா, பானு ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரி, ஜெகதீஸ்வரி மற்றும் கணேஸ்வரி, அகிலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், வாமதேவன் (பொறியியலாளர்) மற்றும் சிவதாசன் (ஓய்வு நிலை அதிபர்), சக்திவேல் (ஓய்வு நிலை உத்தியோகத்தர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 59505) E

44/1 அம்மன் றோட்
பண்டாரிக்குளம்
வவுனியா

தகவல்:
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலியில் 01, 02, 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
பலாலி வீதி - 75 மீற்றர்.
திருநெல்வேலி சந்தி - 300 மீற்றர்

தொடர்புகளுக்கு:
077 253 2575

(CS/4093) J-1

## காணிகள் தேவை

யாழ் மாவட்டத்தில் 05 பரப்பிற்கு மேற்பட்ட காணிகள் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:
077 253 2575

## விடை தருதலன்றி வேறு வழியில்லையே!



மண்ணுலகில்
11 . 05 . 1987

விண்ணுலகில்
26 . 09 . 2025

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்விசார் பணிக்குழாம் தோழனான

அமரர் **தர்மராசா ஞானகிரி**

கடமையில் கண்ணானீர் மகளிர் கல்லூரியில் பணியேற்றீர்
கடமைக்கு வினையின்றி தோழமைக்கும் உயிர்தந்தீர்
கல்லூரியின் வளர்ச்சியிலும் தோழமையின் உயர்ச்சியிலும்
உளம் நிறைய உழைத்த உத்தமனே
பாதிவழியில் எமைப் பரிதவிக்க விட்டதேனோ?

பிரிவால் துயருறும்
2019 - 2023 பணிக்காலத் தோழமைகள்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(CR/46348) J-1

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
23 . 10 . 1948

மறைவு
10 . 10 . 2024

### மார்க்கண்டு பேராயிரவன்

காலம் கரைந்தோடுகிறது. அப்பா...... எனும்
அந்த மாயச்சொல்லோசை காற்றின் மீதேறி
காதடையும் போதெல்லாம் நெஞ்சம் நெகிழ்கிறது
எங்கள் அப்பா எங்களின் நம்பிக்கை, துணிவு, அன்பு,
தோழமை, மகிழ்வு, புன்னகை, பெருமிதம் எல்லாமுமே
தோள் தொட்டு துணையாகி வந்த எங்கள் வாழ்வின் நாயகனை
காலத்திடம் தொலைத்து காத்திருக்கின்றோம்
கள்ளமற்ற புன்னகையையும் குதூகலிக்கும்
பிள்ளை மனதையும் எல்லாவற்றையும் மன்னிக்கும்
இனிய பண்பையும் இழந்தோம் அப்பா !
உங்கள் அன்பெனும் நினைவுகளில் கரைகிறது எம் மனம்
நினைவுகள் வருடும் ஒவ்வொரு பொழுதுகளிலும் நிறைகின்ற
விழிநீரில் நீங்கள் எம்மோடு வாழ்கின்றீர்கள்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவுகள்.

(CS/30505) J-1

## விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு,செப்.28

களுத்துறையில் புலத்சிங்கள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொல்காவ புலத்சிங்கள வீதியின் பருத்தல்விலப் பகுதியில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை, இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மொல்காவ நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ச-இ)

## பால்நிலை வன்முறைகள் கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் பால்நிலை வன்முறைக்கு எதிரான விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரனின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, மாவட்ட ரீதியில் சிறுவர்கள் மற்றும் மகளிர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் பாடசாலை இடைவிலகல்,மீளிணைப்பு செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக்கொடுத்தல், சுகாதாரம் மற்றும் உணவு, முன்பள்ளி செயற்பாடுகள், சிறுவர் கழகச் செயற்பாடுகள், கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுச் செயற்பாடுகள், பிரதேசமட்ட சிறுவர் பெண்கள் முறைப்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (ச-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவுஸர் தடம்புரண்டு விபத்து

யாழ்ப்பாணம், செப்.28

பொதுமக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்காக நீரை ஏற்றிச் சென்ற பவுஸர் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. விபத்தில் வாகனத்தின் சக்கரம் ஒரு புறமாக உருண்டோட, பவுஸர் இன்னொரு புறமாக குடைசாய்ந்தது. வீதி வழியாக மக்கள் பயணிக்காததால் அசம்பாவிதம் எதுவும் ஏற்படவில்லை. குறித்த வாகனம் பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சு-27)

**Technical Assistant தேவை**

யாழ் சோலர் நிறுவனம் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை

- Technical Assistant - (NVQ Level - 03) - 01
- சோலர் பராமரிப்பாளர் - (கல்வித்தகமை அவசியமில்லை) - 02

தொடர்பு: 077 500 5773

(CS 305041 E)

**காணி விற்பனைக்கு**

கல்வியங்காடு கலைமணி வீதியில் காணி விற்பனைக்கு உண்டு

077 624 9394, 070 669 6208

(CS 305011 E)



**BGA MATRIMONIAL SERVICE**

உங்கள் மனதுக்கு பொருந்தும் வாழ்க்கைத்துணையை இன்றே தேடுங்கள்!

பாதுகாப்பான மற்றும் நம்பகமான சேவை
100% சரிபார்க்கப்பட்ட சுயவிவரங்கள் உடனடி திருமண யோசனைகள்
அனைத்து மதம் மற்றும் ஜாதிக்குமான திருமண யோசனைகள்

BGA Matrimonial Service
Wellawatte, Colombo-6
0771028450
bgamatrimonialservice@gmail.com

**தெஹிவளையில் மன நிறைவோடு மற்றுமோர் புதுமனைப் பிரவேசம்**

இல 14, School Avenue, Dehiwala இல் அமையப் பெறும் புது தொடர்மாடித் தொகுதி HAMPDEN HOMES 04 இல் இன்றே உங்கள் எதிர்கால இல்லத்தை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்



- 2, 3, 4 படுக்கையறைகள் கொண்ட 37 தொடர்மாடி சொகுசு இல்லங்கள்
- நீச்சல் தடாகம் மற்றும் உடற் பயிற்சி நிலையம் — 960 Sq.Ft | 1,070 Sq.Ft
- பிரத்தியேக வாகனத் தரிப்பிடம் — 1,225 Sq.Ft | 1,410 Sq.Ft | 1,800 Sq.Ft | 1,950 Sq.Ft
- 24 மணிநேர பாதுகாப்புச் சேவை மற்றும் பல வசதிகளுடன்...

HAMPDEN PROPERTY DEVELOPERS (PVT) LTD
11-1/4, Pinto Place, Colombo 06, Sri Lanka
hmpeng2009@gmail.com www.hmpeng.com
+94 773 315 413
+94 777 307 103

**Keells புதியவை குறைந்த விலையில்**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய ராசிபலன்

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்.

**மிதுனம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். உறவினர்களிடம்பேசும்போதுபொறுமையைக்கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம்செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத உற்சாகம் உண்டாகலாம். வெளியூர்ப்பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



# யாழ். பல்கலையில் திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.28

தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பொது நினைவுத்தூபியடியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.


நிகழ்வில் தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கு முன்பாகப் பொதுச் சுடரேற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-25,66)

# வவுனியாவில் வர்த்தக சந்தை!

வவுனியா,செப்.28

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை ஆகியன இணைந்து நடத்திய வடமாகாண தொழிற்றுறை வர்த்தகசந்தை வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முதன்மை அதிதியாக கலந்துகொண்ட வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். இதில் உள்ளூர் உற்பத்திகள் உட்பட 50க்கும் மேற்பட்ட விற்பனைக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், வவுனியா மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-110)





# யாழ். மாநகரசபை அமர்வில் தியாகதீபத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். மாநகரசபை மாதாந்தப் பொதுக்கூட்ட அமர்வில் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா தலைமையில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் சகலரும் இணைந்து தியாகதீபம் திலீபனுக்கு அகவணக்கம் செலுத்தி அஞ்சலித்தனர். (ச-25)

## வல்வெட்டித்துறையில்

# உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.28

வல்வெட்டித்துறை நகரசபையின் உள்ளூராட்சிவார இறுதி நாள் நிகழ்வுகள் வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற பொது மண்டபத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நகராட்சிமன்றத் தவிசாளர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி தர்ஷினி நிதர்ஷன், சிறப்பு விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.பார்த்தீபன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-25,100)

**வீட்டுப் பணியாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றிட்கு வீட்டுச் சமையலுக்கு உதவிசெய்தல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க பணியாளர் உடன் தேவை.

தொடர்பு:- 070 710 0102

# ஹைஏஸ் விபத்து; 11 பேர் காயம்!

பதுளை மஹியங்கனை, கிராதுருகொட்டாவப் பகுதியில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற ஹைஏஸ் ஒன்று வீதியை விட்டுவிலகி மரத்தில் மோதி விபத்துக் குள்ளானதில் 11 பேர் காயமடைந்து மஹியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள னர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. (ச-இ)

தீபாவளியினை முன்னிட்டு
ஏசியன் தளபாட நிலையத்தின்
MEGA SALE விசேட விலைக்கழிவு MEGA SALE
01.10.2025 முதல்...
இடம்-இலங்கை வேந்தன் மண்டபம்,யாழ்ப்பாணம்



CONTACT US
230,114,Navalar Road,Jaffna
0768219416
0212227892 ,0773583879

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## அஞ்சலிப்பு என்பது யாதெனில்...!

தியாகதீபம் திலீபன் தண்ணீரைக்கூட அருந்தாமல் உணவைத் தவிர்த்து சாவை நேசித்து அதை இறுகப்பற்றி - உயிர்துறந்து 38 வருடம் கடந்து போய்விட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தின் வழியாக, மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதை தமது இலட்சியமாகக் கொண்டிருந்தபோதிலும், அந்த அமைப்பைச் சேர்ந்த திலீபனின் போராட்டம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆயுதங்களும், சீருடைகளுமற்ற நிலையில், தமிழ் இளையோரின் ஒரு பிரதிநிதியாக அத்தனை அன்னைகளின் குழந்தையாக - ஐந்து அம்சக்கோரிக்கைகளை பாரதத்திடம் பாரப்படுத்தி தன் கண்ணெதிரே சாவை ஏற்றவன்தான் திலீபன்.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத திலீபனுக்கான அஞ்சலியை நாங்கள் சரிவர மேற்கொள்கின்றோமா? ஈழத்தமிழரின் வாழ்வியலில் அவன் எவ்வளவுதூரம் தவிர்க்கப்படமுடியாதவன் என்பதை அடுத்த சந்ததிக்கு முறையாகக் கடத்துகின்றோமா? என்றால், அதற்குரிய பதில் நிச்சயம் திருப்திப்படும்வகையில் அமையாது. தீபங்கள் ஏற்றுவதும், வாகனப் பவனிகள் நடத்துவதும், மலர்மாலைகள் அணிவிப்பதும், எழுச்சிக் கீதங்கள் இசைக்க விடுவதும்தான் அஞ்சலிப்புகள் என்ற ஒருவித மட்டுப்படுத்தப்பட்ட கலாசாரத்துக்குள் - குறுகிய வட்டத்துக்குள் நாங்கள் பழக்கப்பட்டுவிட்டோம். நாங்கள் திலீபனுக்காக மேற்கொள்ளும் விடயங்கள் எனப்படுபவை, திலீபனின் நினைவை முன்னிட்ட 'பருவகால' ஞாபகமூட்டல்கள். அவை அஞ்சலிப்பின் ஒரு பகுதி மட்டுமே.

திலீபனுக்கானமுறையான அஞ்சலிப்பென்பது, அந்த ஒப்பற்ற செம்மலின் தியாகத்தை எங்களின் வாழ்வியலில் கட்டமைப்பது. திலீபனின் ஐந்து அம்சக்கோரிக்கைகளை இன்று எத்தனை இளைஞர்கள் தெரிந்துவைத்திருக்கின்றனர்? நல்லூரால் பயணிக்கும்போது, 'இதில்தான் எமக்காக ஓர் உயிர் உண்ணாமல் - அருந்தாமல், அனுதினம் தன்னை வதைத்து துடிதுடித்து உயிரிழந்தது' என்ற எண்ணம் எத்தனை பேருக்கு வருகின்றது? ஒன்றுமட்டும் உண்மை, கட்சிகளை முதன்மைப்படுத்திய அஞ்சலிப்புகளால் இவ்வாறான வரலாறுகளை முழுமையாக ஊடுகடத்தி விடமுடியாது. அது புறக்குடத்தில் நீர்நிறைப்பதற்கு ஒப்பான செயல். அந்த முயற்சிகள் அன்றைய நாளுடன் வலுவிழந்து நினைவற்றுத் தான்போகும்.

திலீபன் ஏன் சாவைக் கண்முன் நேசித்தான்? தாயகத்துக்கு ஏன் திலீபன் தேவைப்பட்டான்? என்ற தெளிவை ஒவ்வொருவரும் எங்களின் இளைய சந்ததிக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். கட்சிக்கொடிகளின்கீழ் மேற்கொள்ளப்படும் அஞ்சலிப்புகளைவிட, வரலாற்றைக் கற்றுக் கொடுப்பதே மேலானது. திலீபனையும், அவன் தியாகியாக காற்றில் கலந்த கதையையும் கற்றுக் கொடுங்கள். அதைத்தான் திலீபன் ஒவ்வொரு தமிழர்களிடத்திலும் எதிர்பார்க்கின்றான். ஏனெனில் திலீபன் தமிழ் மக்களை எல்லையற்று அன்புசெய்தான்.

'என் மக்கள்மீதுள்ள தாளாத பாசத்தின் பேரில், அவர்களின் விடிவுக்காக நான் 651ஆவது விடுதலைப்புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டு இருக்கின்றேன்.'


-இ.திலீபன்


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : adv@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

கடமை தெளிவாக இருக்கிறபோது தாமதம் செய்வது அறிவீனம் மட்டுமல்ல, ஆபத்தும்கூட ; கடமை தெளிவாக இல்லாதபோது தாமதம் செய்வது விவேகம் மட்டுமல்ல, பாதுகாப்பானதும்கூட.

– த்ரையன் எட்வார்ட்ஸ் –




இவ்வருடத்தில்

## மருந்துக் கொள்வனவுக்கு ரூ.78 பில்லியன் செலவு!



கொழும்பு,செப்.28

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் தேசிய மருந்தகக் கூட்டுத்தாபனம் 78 பில்லியன் ரூபா செலவில் மருந்துகளைக் கொள்வனவு செய்துள்ளது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அரச மருத்துவமனைகளில் இன்சுலிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் விடயம் உண்மையல்ல. 3 வாரங்களுக்குத் தேவையான இன்சுலின்கள் கையிருப்பில் உள்ளன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் ஒன்றரை மாதங்களுக்கு அவசியமான ஒரு தொகை இன்சுலின்கள் நாட்டை வந்தடைய உள்ளன. அத்தோடு ஒக்ரோபர் மாத இறுதியில் மேலும் 4 மாதங்களுக்குத் தேவையான இன்சுலின்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்படவுள்ளன. டிஜிற்றல் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உரிய தரத்துக்கமைவான மருந்துகள் மாத்திரமே கொள்வனவு செய்யப்படுகின்றன - என்றார். (ச-இ)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

கொழும்பு,செப்.28

திஸ்ஸமஹாராம சந்துங்கம பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 58 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையசந்தேகநபரைக் கைது செய்வதற்கான தீவிர விசாரணைகளைத்திஸ்ஸமஹாராமப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



## பேலியகொடவில் துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு,செப்.29

பேலியகொடை மீன் சந்தைக்குச் செல்லும் வீதிக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பின்னால், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போதே, இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழுவின் தலைவரான கெஹெல்பத்தர பத்மே என்பவரை விசாரணைக்குட்படுத்திய பின்னர், அவரிடமிருந்து பெறப்பட்ட தகவலுக்கமைவாக இவை கைப்பற்றப்பட்டன. (க-இ)

## தாமரைக் கோபுரத்தில் சாகச விளையாட்டு

2026ஆம் ஆண்டு கொழும்பு தாமரைக் கோபுரத்தில் 'பங்கி ஜம்பிங்' கயிற்றின்மூலம் குதிக்கும் விளையாட்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன்போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இது சர்வதேச கவனத்தை ஈர்ப்பதுடன் இலங்கையின் சாகச சுற்றுலாத் துறையை வலுப்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மின்துறை நிறுவனங்களுக்கு பணிப்பாளர் சபை நியமனம்

கொழும்பு, செப்.28

இலங்கையின் மின்சாரத்துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக, புதிதாகப் பிரிக்கப்பட்ட நான்கு நிறுவனங்களுக்கான பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நான்கு நிறுவனங்களுக்கும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களுக்கான தலைவர்கள் இன்னும் ஒருவார காலத்துக்குள் நியமிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நீண்டகாலமாக நட்டத்தில் இயங்கிவரும் இலங்கை மின்சாரசபையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், மின்சாரத்துறை தொடர்ந்தும் அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகவே இருக்கும் என்றும் அரசாங்கம் விளக்கமளித்துள்ளது. (எ-இ)

**நாளை**

திங்கட்கிழமை - புரட்டாதி 13

29.09.2025

சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான வழிமுறை மட்டுமே புலம்பெயர்வுக்கான

## வெளிநாட்டிற்கு செல்வதற்கே ரமேஷ் எப்போதும் விரும்பினான்.

இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் உள்ள ஒரு சிறிய மீனவ கிராமத்தில் வளர்ந்த ரமேஷ் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய பின்னர் பணத்தை சேமித்து வைத்திருப்பதையும், மோட்டார் சைக்கிள்களை வாங்குவதையும் சுதந்திரமாக வாழ்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதையும் அவர்கள் சொத்துக்களை வாங்குவதையும் பற்றிய கதைகளை அடிக்கடி வீடியோ வழியாக பார்த்திருப்பதுடன் அவ்வாறான கதைகளை கேட்டும் இருக்கின்றான். இது இவ்வாறிருக்க, அவனது சொந்தக் குடும்பம் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. அவனது தந்தை நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்த பிறகு, குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ரமேஷ்ன் தாய் தெருவோரத்தில் சிற்றுண்டிகளை விற்கத் தொடங்கினார்.

மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவனாக இருந்த ரமேஷ் தனது குடும்பத்திற்கு ஒத்தாசை வழங்குவதற்காக சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைக் கல்வியை தொடராமல் தனது கல்வியை முடித்துக் கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறினான். மணல் ஏற்றுதல், மீன்பிடி வலைகளை பழுதுபார்த்தல் போன்ற நாளாந்த சம்பளத்திற்கு வேலைகளைச் செய்யத் தொடங்கிய அவனுக்கு இதன் மூலம் ஒரு சிறிய வருமானம் மாத்திரமே கிடைத்தது. ஆயினும், இதைவிட பெரியதொரு வாழ்கையை அடைந்துகொள்வதைப் பற்றி கனவு காண்பதை மாத்திரம் அவன் நிறுத்திக்கொள்ளவில்லை. வெளிநாட்டிற்கு சென்று சிறந்ததொரு வேலையைத் தேடிக்கொண்டு வீட்டிற்குப் பணம் அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் அவனது மனம் இரவு பகல் என பாராமல் போராடிக் கொண்டிருந்தது. தன்னைச் சுற்றியுள்ள ஏனைய இளைஞர்களைப் போலவே புலம்பெயர்வுதான் இந்நிலையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழி என்று அவன் நம்பினான்.

ஒரு நாள், பாடசாலையில் தன்னுடன் படித்த ஒரு நண்பன் ஐரோப்பிய நாடு ஒன்றில் வேலைகளை ஏற்பாடு செய்து தரக்கூடிய ஒரு "நபரைப்" பற்றி அவனிடம் கூறினான். மொழித் திறனோ அல்லது பெருமளவு ஆவணங்களை நிரப்புவதோ தேவையில்லை என்றும் முன்கூட்டியே பணம் செலுத்தினால் மட்டும் போதுமானது என்றும் கூறினான். அந்த வேலையின் ஊடாக மாத்திற்கு ரூபாய் 400,000 இற்கும் மேல் உழைக்கலாம் என்றும் அவனுக்குச் சொல்லப்பட்டது. கிடைக்கக் போகும் சலுகையால் மயங்கி எந்தவொரு ஆபத்துகளையும் பற்றி ஒரு கணமேனும் சிந்தியாமல் ரமேஷ் அந்த தொழில் முகவரைச் சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே தன்னிடம் இருந்த அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்தார். அவனது தாயார் இந்த விடயத்தில் சற்று தயக்கம் காட்டினார். ஆனாலும் ரமேஷ் அவரை சமாதானப்படுத்தினான். "இது எனக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு," என்று கூறினான். "நான் சில ஆண்டுகளில் திரும்பி வருவேன், நிலைமை மாறும்." தொழில் முகவர் என்று அழைக்கப்படுபவருக்கு பணம் செலுத்துவதற்காக ரமேஷ் தங்கள் குடும்ப வீட்டை அடமானம் வைத்து ரூபாய் 2 மில்லியன் கடன் வாங்கினான்.

அதனையடுத்து பெயர் கூட தெரியாத ஒரு இடைமாறல் நாட்டிற்கு ரமேஷ் அழைத்துச் செல்லப்பட்டான். ஆனால் அவன் தரையிறங்கிய தருணத்திலிருந்து, விடயங்கள் தடம் மாறி தவறான முறையில் நகர ஆரம்பித்தது. ரமேஷ் விமான நிலையத்திலிருந்து நேரடியாக ஒரு நெரிசலான தங்குமிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் அங்கு ஏராளமான பிற இலங்கையர்கள் மற்றும் தெற்காசியர்கள் வைக்கப்பட்டிருந்தனர். தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக என்று கூறி அவரது கடவுச்சீட்டும் அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அது ஒருபோதும் திருப்பித் தரப்படவில்லை. ஒரு கட்டுமான தளத்தில், சம்பளமோ அல்லது ஓய்வு நாட்களோ இல்லாமல், மிக மோசமான சூழ்நிலையில் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது. அவனது ஒப்பந்தம் பற்றியோ அல்லது லீவு பற்றியோ கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அச்சுறுத்தல்களையும் கூச்சலிடுதலையும் சந்திக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.



ரமேஷ்க்கு ஆங்கிலமோ அல்லது அவர் இருந்த இடத்தின் உள்ர் மொழியோ பேசத் தெரியவில்லை என்பதுடன் தொலைபேசி வசதியும் இருக்கவில்லை. தொழில் முகவர் தன்னை ஏற்கனவே இணங்கிக்கொண்ட நாட்டிற்கு அழைத்துச் செல்வார் எனும் எண்ணம் மட்டுமே அவனிடம் இருந்தது. நாட்கள் வாரங்களாக மாறின. ஆனால் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. தான் ஏமாற்றப்பட்டுள்ளதையும் தனது முகவர் போலியானவர் என்றும் ஒரு ஆட்கடத்தல்காரர் என்பதையும் ரமேஷ் உணரத் தொடங்கினான்.

பின்னர் அந்த ஆட்கடத்தல்காரர் மீண்டும் அவர்களிடம் வந்து ஐரோப்பாவிற்கான பயணம் படகு வழியாக தொடரும் என்று தெரிவித்தார். "இப்போது மக்கள் இப்படித்தான் சென்றடைகின்றார்கள்," என்று கூறினார். "நீங்கள் படகு பயணத்தை எப்படியாவது சமாளித்துக் கொள்ளத் தான் வேண்டும்" என்ற கூறியதும் ரமேஷ் பயந்தான், ஆனால் வேறெந்த வழியும் இருக்கவில்லை என்ற நிலையில், இனிமேல் இழப்பதற்கு என்ன இருக்கின்றது என்று நினைத்து அதனை ஒப்புக்கொண்டான்.

இருள் சூழ்ந்த அந்த இரவில் அவனும் மற்றும் பலரும் தூரப் பிரதேசத்தில் இருந்த ஒரு கடற்கரையில் இருந்து ஒரு பழைய மீன்பிடி இழுவைப் படகில் ஏற்றப்பட்டனர். இழுவைப் படகு சன நெரிசல் மிக்கதாக இருந்ததுடன் பாதுகாப்பு உபகரணங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சில பைகளில் இருந்த பிஸ்கட்டுகளைத் தவிர வேறு எந்த உணவும் இருக்கவில்லை என்பதுடன் போதுமான அளவு தண்ணீர் கூட இருக்கவில்லை. அவர்கள் ஆழ் கடலில் பயணிக்க தொடங்கியவுடன் நிலைமை மோசமாக மாறியது. கடல் கொந்தளிப்பாக இருந்ததுடன் கடல் பயணத்தால் பலருக்கு குமட்டல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படத் தொடங்கின. பகலில் வெயில் அவர்களை சுட்டெரித்தது. இரவில், குளிர் காற்று அவர்களின் மெல்லிய ஆடைகளைத் துளைத்து உள்ளே நுழைந்தது. ஒரு நாள் இரவில் ஓர் இளைஞன் படகில் இருந்து தவறி விழுந் ததுடன் அவனைக் கடைசிவரை கண்டுபிடிக்கவே முடியவில்லை.



ஐந்தாவது நாளில், தண்ணீர் படகுக்குள் கசிய ஆரம்பித்தது. அச்சம் அவர்களை வேகமாகக் கௌவிக்கொண்டது. எல்லா நம்பிக்கையும் இழந்துவிட்டதாக அவர்கள் நினைத்தபோது அவர்களைக் கடந்து சென்ற ஒரு சரக்குக் கப்பல் அவர்களைக் கண்டு அவர்களை மீட்டு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இந்த புலம்பெயர்ந்தோரை அருகிலுள்ள நாட்டிடம் ஒப்படைத்தது. தனது உயிரைத் தக்க வைத்துக் கொள்வதை தவிர இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்பட இறுதியில் ரமேஷ் அந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டான். ஆட்கடத்தல்காரனை நம்பி தனது பணத்தையும் கனவையும் ரமேஷ் இழந்தான். ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்ற குறுக்குவழி தவறு என்பதை அவன் உணர்ந்தான். பயணம் அவனுக்கு நிறைய பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைய குறுக்குவழிகள் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். எந்த வெளிநாட்டிலும் வேலைக்கு தகுதியும் அனுபவமும் தேவை. எந்த தகுதியும் அனுபவமும் இல்லாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக வழங்கப்படுகின்ற வாக்குறுதி என்பது, நீங்கள் ஆபத்தில் நுழைய முயற்சிக்கிறீர்கள் என்பதற்கான எச்சரிக்கையைத் தவிர வேறொன்றும் அல்ல.

இப்போது தனது கிராமத்தில், ரமேஷ் தனது பயணத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறான். ஒழுங்கற்ற புலம்பெயர்வின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இளைஞர் குழுக்கள் மற்றும் உள்;ர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அவன் இணைந்து பணியாற்றுகிறான். வாக்குறுதியளிக்கப்பட்ட அனைத்தையும் நம்ப வேண்டாம் என்று அவன் மற்றவர்களை வலியுறுத்துகிறான். "உங்களுக்கு ஆவணங்கள் தேவையில்லை என்று யாராவது சொன்னால், அல்லது இவை அனைத்தும் இரகசியமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், அது உங்களுக்கு ஆபத்து வரப்போகின்றது என்பதற்கான எச்சரிக்கை அறிகுறி" என்று அவன் இளைஞர்களிடம் கூறுகிறான். "அவர்கள் உங்களிடம் பொய் சொல்கிறார்கள்". இப்போது பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரையும் ஆட்கடத்தல்காரரையும் எவ்வாறு வேறுபடுத்துவது என்பதை அவன் கற்பிக்கின்றான்.

ரமேஷின் கதை ஒரு உண்மையான சம்பவமே. சம்பந்தப்பட்டவர்களின் அடையாளத்தை மறைக்க சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் இதேபோன்ற பயணங்களை மேற்கொண்ட பல இலங்கை இளைஞர்களின் உண்மையான மற்றும் பேரழிவைக் கொண்டு வரும் அனுபவங்களை பிரதிபலிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் மட்டும், ஒழுங்கற்ற புலம்பெயர்வு வலையமைப்பில் சிக்கிய பின்னர் 1,700 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மலேசியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். மார்ச் 2025 இல், ஒவ்வொருவரும் 4.5 மில்லியன் ரூபாய் வரை செலுத்தி பெற்ற போலி விசாக்களுடன் ஒன்பது இலங்கையர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். டிசம்பர் 2023 இல், 14 இலங்கையர்கள் ஒழுங்கற்ற முறையில் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கதைகள் அதிகரித்து வரும் ஒரு நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன. அதிக ஊதியம் தரும் வேலைகளையும், விரைவாக விசாக்களையும் பெற்றுத் தருவதாகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைவதற்கு உத்தரவாதம் வழங்குவதாகவும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்கடத்தல்காரரர்கள் இளைஞர்களின் நம்பிக்கைகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அதிலிருக்கும் ஆபத்துகளையும் சுரண்டலையும் மற்றும் சட்டரீதியான விளைவுகளையும் அரிதாகவே குறிப்பிடுவார்கள். ஆட்கடத்தல்காரரின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பதுதான். மேலும் ஒழுங்கற்ற புலம்பெயர்ந்தோருக்கு உதவ அவர்களுக்கு எந்த பிணைப்பும் கடப்பாடும் இல்லை. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையின் பிரகாரம் ஆட்கடத்தல் என்பது ஒரு சர்வதேசக் குற்றம் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆட்கடத்தலைக் குற்றமாக பிரகடணப்படுத்தும் சர்வதேச மற்றும் நாடுகளுக்குரிய சட்டங்கள் உள்ளன.

வாக்குறுதிகளால் சிக்கிக்கொள்வது என்றால் என்ன என்பதை ரமேஷ் இப்போது அறிவான். உண்மையான வாய்ப்பு குறுக்குவழிகள் அல்லது இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் வராது என்பதை அவன் மற்றவர்களுக்கு நினைவூட்டுகிறான். புலம்பெயர்வு நம்பிக்கையை அளிக்கும் - ஆனால் பாதுகாப்பான, சட்டபூர்வமான மற்றும் ஒழுங்கான வழிகள் மூலம் அவை மேற்கொள்ளப்படும் போது மாத்திரமே அது அவ்வாறு அமையும். உதவி, விழிப்புணர்வு மற்றும் சரியான வழிகாட்டுதலுடன், இள்ளஞர்கள் தங்கள் எதிர்காலத்தையும் - அவர்களின் வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆர்வமுள்ள புலம்பெயர்ந்தோர் தகவலறிந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும், போலி தொழில் முகவர்களாக மாறுவேடமிட்டுக் கொண்டுள்ள ஆட்கடத்தல்காரர்களை நம்பியிருக்கக்கூடாது என்றும் அவன் இப்போது வலியுறுத்துகிறான்.

**பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதற்காக இலங்கையில் உள்ள புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) 077 441 0086 என்ற இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ளவும்.**

இந்த தகவல் பெட்டிகள் கட்டுரையில் சேர்க்கப்படும் - இந்த கட்டமைக்கப்பட்ட உரை கட்டுரையின் உள்ளே உள்ளடக்கப்படும் என்பதுடன் அது மேலே உள்ள உண்மையான கதையின் தொடர்ச்சியாக இடம்பெறாது)

### நீங்கள் புறப்படுவதற்கு முன்:

வெற்றிகரமான மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு பயணத்தை உறுதிசெய்ய, வருங்காலத்தில் புலம்பெயர்ந்தோர் அத்தியாவசிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

- **வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் வேலை வாய்ப்புகளின் சட்டப்பூர்வ நிலையைச் சரிபார்க்கவும்:** எந்தவொரு கட்டணத்தையும் செலுத்துவதற்கு அல்லது புறப்படுவதற்கு முன் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் சட்டப்பூர்வ பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அரசாங்க தகவல் வழிமூலங்கள் மூலம் வேலை வாய்ப்புகளைச் சரிபார்க்கவும்.
- **சட்டபூர்வமான வழிகளைப் பயன்படுத்தவும்:** பதிவுசெய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்கள், உத்தியோகபூர்வ தூதரக வழிமூலங்கள் அல்லது சரிபார்க்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் விசாக்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- **இடைத்தரகர்கள் மற்றும் உரிமம் பெறாத முகவர்களைத் தவிர்க்கவும்:** புலம்பெயர்வு முகவர்களாகக் காட்டிக் கொள்ளும் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலியாவதைத் தவிர்க்க பதிவுசெய்யப்பட்ட.'.உரிமம் பெற்ற ஆட்சேர்ப்பு நிறுவனங்களுடன் நேரடியாகக் கையாளவும்.
- **ஆராய்ச்சி சார்ந்த இலக்கு நாடுகள்:** நீங்கள் செல்லத் திட்டமிடும் நாட்டின் சட்டங்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு, புறப்படுவதற்கு முன் உங்கள் தொழில்தருநர் பற்றிய தகவல்களைச் சரிபார்க்கவும்.

### பயணத்தைத் தொடங்குவதற்கு முனனர் தேவைப்படும் அத்தியாவசிய ஆவணங்கள்:

பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான முறையில் புலம்பெயர்வதற்கு, தனிநபர்கள் பின்வரும் அத்தியாவசிய ஆவணங்களைத் தயாரித்து பாதுகாக்க வேண்டும்:

- **செல்லுபடியாகும் கடவுச்சீட்டு:** சர்வதேச பயணத்திற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டினை கொண்டிருக்க வேண்டும்.
- **விசா:** தேவையைப் பொறுத்து, புலம்பெயர்வோர் சரியான மற்றும் செல்லுபடியாகும் விசா வகையைக் (வேலை, படிப்பு, சுற்றுலா போன்றவை) கொண்டிருத்தல் வேண்டும்.
- **தொழில் அனுமதிப்பத்திரங்கள்:** வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்ந்தால், உத்தியோகபூர்வ தொழில் அனுமதிப்பத்திரம் அவசியானதாகும்.
- **தொழில் ஒப்பந்தங்கள்:** தொழில்தருநரால் வழங்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட ஒப்பந்தம் உங்களிடம் இருப்பதை உறுதிசெய்யவும். வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வது குறித்து முடிவு செய்ய ஒப்பந்த நிபந்தனைகளைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.
- **மருத்துவ அறிக்கை மற்றும் தடுப்பூசி பதிவுகள்:** சில நாடுகளில் தொழில் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார நிலையை அல்லது தொழில் புரிதல் சார்ந்த மருத்துவ தகுதியை உறுதிப்படுத்துக் கொள்வதற்கான சான்றிதழ்களையும் தடுப்பூசிகளுக்கான சான்றுகளையும் அவசியாமாக்கியுள்ளன.
- **நிதி நிலைத்தன்மைக்கான சான்று:** சுற்றுலாப் பயணியாகவோ அல்லது கல்விக்காகவோ பயணம் செய்தால் நிதித் திறனை நிருபிக்க வங்கி அறிக்கைகள் அல்லது அனுசரணையாளர்களின் கடிதங்கள் தேவைப்படலாம்.
- **அவசர தொடர்புகள் மற்றும் ஆவணங்களின் பிரதிகள்:** டிஜிட்டல் பிரதிகளை உங்கள் வசம் வைத்திருங்கள். அத்துடன் உங்கள் பயண ஆவணங்களின் டிஜிட்டல் அல்லது அச்சுப் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். பாதுகாப்பிற்காக அவசர தொடர்பு எண்களை எடுத்துச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன ஒரே ஒரு வழிமுறையாக இருக்க வேண்டும்

## ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?

ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்பது புலம்பெயர்வோரின் பிறப்பிடம், இடைமாறல் இடம் அல்லது சேருமிடம் சார்ந்ததாக உள்நுழைவதற்கு அல்லது வெளியேறுவதற்கு ஏதுவான சட்டங்கள், விதிமுறைகள் அல்லது சர்வதேச ஒப்பந்தங்களுக்கு புறம்பாக நிகழும் ஆட்களின் நடமாட்டத்தைக் குறிக்கிறது. சிலர் புலம்பெயர்வதற்குத் தேவையான தகுதிகள் இல்லாததால் அல்லது சட்ட செயன்முறைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் அல்லது ஆட்கடத்தல்காரர்களினால் பரப்பப்படும் தவறான தகவல்கள் காரணமாக ஒழுங்கற்ற புலம்பெயர்வுக்கு முயல்கின்றனர். மேலே விவரிக்கப்பட்ட ரமேஷ்ன் கதை ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வு பயணத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2024 ஆம் ஆண்டில், இலங்கையில் ஒழுங்கற்ற புலம்பெயர்வு சம்பவங்கள் அதிகரித்ததுடன் இது ஒழுங்கற்ற வழிகளில் புலம்பெயர முயற்சிக்கும் தனிநபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் போக்கை எடுத்துக்காட்டுகின்றது. இது பெரும்பாலும் உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் மற்றும் சட்ட விளைவுகளை எதிர்நோக்க காரணமாக அமைந்துவிடுகின்றது.

கடல் மார்க்கமாக தமது நாட்டு மக்கள் ஒழுங்கற்ற முறையில் புலம்பெயர முயன்ற பல சம்பவங்களை இலங்கை அதிகாரிகள் அறிக்கையிட்டுள்ளனர். மே 2023 இல், இந்திய சமுத்திரத்தின் ஊடாக அவுஸ்திரேலிய எல்லையை அடைய முயற்சி செய்த 41 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய எல்லைப் படையால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எம் நாட்டின் ஊடகங்களில் இதேபோன்ற எண்ணற்ற சம்பவங்கள் அவ்வப்போது தொடர்ந்து தெரிவிக்கப்படுகின்றன. இந்த சம்பவங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வுடன் தொடர்புடைய அபாயங்களை எடுத்துக்காட்டுவதுடன் இதில் சுரண்டல், தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தலுக்கான சாத்தியக்கூறுகள் போன்றவையும் அடங்கும். இதனை வேறு விதமாக கூறுவதானால், புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறைகள் பற்றியும் அவர்களின் பயணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான புலம்பெயர்வு வழிமுறையினை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது பற்றியும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் இவற்றை மறந்து தங்கள் இலக்குகளை அடைவதை நோக்கி மாத்திரமே பயணிக்கிறார்கள் என்பதையுமே இது எடுத்துக் காட்டுகிறது. பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான சில முக்கியமான தகவல்களைப் புரிந்துகொள்ள கீழே உள்ள தலைப்புகள் உங்களுக்கு உதவும். புலம்பெயர்வு தொடர்பான குற்றங்கள் உள்ளதுடன் இதில் பெரும்பாலும் புலம்பெயர்ந்தோர் குற்றவாளிகளுக்கு பலியாகின்றனர். அறியாமை காரணமாக புலம்பெயர்ந்தோர் பாதிக்கப்படுகின்றனர் என்பதுடன் அவர்களின் தமது சொந்த நாட்டின் மற்றும் அவர்கள் நுழைய முயற்சிக்கும் நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறியதற்கான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றனர்.

## ஆட்கடத்தல் என்றால் என்ன?




- ஆட்கடத்தல் என்பது தேச எல்லைகளை ஒழுங்கற்ற முறையில் கடக்க ஆட்கடத்தல்காரர்களின் சேவைகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு பணம் செலுத்துவதை உள்ளடக்கியதாகும். இது ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராக செய்யப்படும் ஒரு சர்வதேசக் குற்றமாகும். புலம்பெயர்வோர் ஆட்கடத்தல்காரருக்கு பணம் செலுத்துவதன் மூலம் தானாக முன்வந்து தங்களைக் கடத்துவதற்கு ஒத்துழைக்கின்றனர். செல்லுபடியாகும் விசா இல்லாமல் சர்வதேச எல்லைகளைக் கடக்கும் பொருட்டு ஆட்கடத்தல்காரர்களின் உதவியைப் பெறுவதற்கு அவர்களை அணுகும் போதே தாங்கள் சட்ட விரோதமான முறையில் கடத்தப்படுவதற்கு ஆட்கடத்தல்காரரை அணுகுகின்றோம் என்று புலம்பெயர்வோருக்குத் தெரியும். சில நேரங்களில் கடத்தல் முயற்சியை வெற்றிகரமானதாக மாற்றிக்கொள்வதற்கு போலி ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது நாடுகளின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறுவதன் மூலம் ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றமாகும்.

மேற்படி கலந்துரையாடப்பட்ட ரமேஷின் சம்பவத்தைப் பொருத்தமட்டில், ஐரோப்பாவிற்குள் நுழைய தனது குடும்பத்தின் வீட்டை அடமானம் வைத்து ஆட்கடத்தல்காரருக்கு பணம் கொடுத்தபோது அவர் தனது பயணத்தைப் பற்றி அறிந்திருந்தார். அவர் தானாக முன்வந்து ஆட்கடத்தல்காரரின் சேவைகளை நாடினார். பெரும்பாலும், புலம்பெயர்வோர் சிறந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் குடியுரிமை வாக்குறுதிகளால் ஆட்கடத்தல்காரர்களால் ஈர்க்கப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட ஆட்கடத்தல்காரரின் உதவியைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்த நாடுகளை அடைந்தவர்கள் பற்றிய உண்மைக்கு மாறான வெற்றிக் கதைகளையும் அவர்கள் கிராமங்களில் கேள்விப்படுகின்றார்கள்.

## புலம்பெயர்வின் வசீகரம்: சிறந்த வாழ்க்கையைத் தேடுதல்

உலகமயமாக்கல் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் வாய்ப்புகள் காரணமாக, குறிப்பாக இளைஞர்கள் வெளிநாடுகளில் கல்வி, தொழில் மற்றும் வாழ்க்கை முறை வாய்ப்புகளை ஆராய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இருப்பினும், புலம்பெயர வேண்டிய அவசரமானது சில சந்தர்ப்பங்களில் அவசரமான மற்றும் தகவல் அறியாத முடிவுகளுக்கு வழிவகுப்பதுடன் இந்த நிலையை அறிந்துகொள்ளும் ஆட்கடத்தல்காரர்கள் எளிதான பயணம், அதிக ஊதியம் தரும் வேலைவாய்ப்புகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சட்டப்பூர்வ அந்தஸ்து போன்ற பொய்யான வாக்குறுதிகளை புலம்பெயர்வதற்கு ஆர்வமாக இருப்பவர்களுக்கு வழங்குவதன் மூலம் நிலைமையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். துரதிர'ஷ்டவசமாக, இத்தகைய ஏமாற்று வழிமுறையாக முன்வைக்கப்படும் கவர்ச்சிகரமான விடயங்கள் பெரும்பாலும் சுரண்டல், கட்டாய உழைப்பு மற்றும் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் அல்லது செல்ல வேண்டிய நாட்டின் குடிவரவு சட்டங்களை மீறியதற்கான சிறைத்தண்டனை போன்றவற்றிற்கும் கூட வழிவகுக்கும்.

## எதிர்காலத்தில் புலம்பெயர்வதற்கு விரும்புவோருக்கான ஆலோசனை

- நீங்கள் ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வோராக மாறுவதற்கு வாய்ப்புள்ளது:
- போலி ஆவணங்களுடன் அல்லது செல்லுபடியாகும் விசா இல்லாமல் ஒரு நாட்டிற்குள் ஒழுங்கற்ற முறையில் நுழைகிறீர்கள்.
- நீங்கள் ஒரு வருகை விசா மூலம் ஒரு நாட்டிற்குள் நுழைந்து, தொழில் விசா இல்லாமல் சேருமிட நாட்டில் தொழிலில் ஈடுபடுகிறீர்கள்.
- விசா காலாவதியான பிறகு சென்றடையும் நாட்டில் நீங்கள் அதிக காலம் தங்குகிறீர்கள்.
- உங்கள் நுழைவுக்கு அனுமதிக்கப்பட்டதைத் தவிர வேறு விடயங்களில் ஈடுபடுகின்றீர்கள். உதாரணம்: மாணவர் விசாவுடன் நுழைந்து வேலையில் ஈடுபடுகிறீர்கள்.

### நீங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறையில் செல்லும்போது என்ன நடக்கும்?

ஒழுங்கற்ற புலம்பெயர்வைத் தேர்ந்தெடுப்பது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடன் இதில் பின்வருவன அடங்கும்:

- உயிருக்கு ஆபத்தான பயணங்கள்.
- ஆட்கடத்தல்காரர்களால் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுதல்.
- நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படுதல் மற்றும் சேருமிட நாட்டின் குடிவரவுச் சட்டங்களை மீறியதற்காக சிறைத்தண்டனை போன்ற சட்ட ரீதியான பாதக விளைவுகள்.
- பணத்தை இழந்துவிடுதல்.
- குடும்பத் தொடர்பினை இழந்துவிடுதல் / தனிமைப்படுதல் மற்றும் மிக மோசமான சூழ்நிலைகளில் உயிர் இழப்பு.
- ஆட்கடத்தல்காரர்கள் பயணத்தின் இடை நடுவில் உங்களைக் கைவிடலாம்.
- பயண ஆவணங்களை பறிமுதல் செய்தல் மற்றும் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல்.
- சொந்த நாட்டில் விட்டுச் சென்ற குடும்பம், கடன் சுமையின் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். சில சமயங்களில் கடனை சரியான நேரத்தில் செலுத்தாவிட்டால், கடன் கொடுத்தவர்கள் குடும்பத்திற்கு பிரச்சனையை உருவாக்கலாம்.
- புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற பயணத்தைத் தொடங்கிய பின்னர் ஆட்கடத்தல்காரர்கள் அவ்வப்போது பணத்தை உங்களிமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். அவர்கள் புலம்பெயர்ந்தவரை வலுக்கட்டாயமாகவோ அல்லது அச்சுறுத்தல் விடுத்தோ பணம் கொடுக்குமாறு கோருகிறார்கள்.



### நினைவில் கொள்ள வேண்டிய சில விரைவான குறிப்புகள்:

#### புறப்படுவதற்கு முன்னர்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடும் போது, ஆட்சேர்ப்பு நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியமானதாகும். இது பொறுப்புக்கூறலையும் ஒழுங்குறுத்தல் தரநிலைகளைப் பின்பற்றுவதையும் உறுதி செய்கிறது. விரைவாக விசாக்களை பெற்றுத்தருவதாக உறுதியளிக்கின்ற மற்றும் இலங்கை சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமான போலி ஆவணங்களைத் தயாரித்துத் தருவதாகவும் கூறுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களாகத் தோன்றும் ஆட்கடத்தல்காரர்களை நம்புவதைத் தவிர்க்க வேண்டும். மோசடி நடைமுறைகளுக்கு எதிராக் உங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நிறுவனம் அல்லது விசா செயலாக்க முகவரால் உறுதியளிக்கப்பட்ட விசாவின் செல்லுபடித் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எப்போதும் சம்பந்தப்பட்ட தூதரகம் அல்லது உயர் ஸ்தானிகராலயத்தைத் தொடர்பு கொள்ளவும். விசா செயன்முறை அல்லது குறிப்பிட்ட விசா வகைகள் குறித்து இந்த நிறுவனங்களுடன் சரிபார்ப்பது உங்களுக்கு தெளிவை வழங்குவதுடன் உங்கள் நலன்களைப் பாதுகாக்க உதவும். இது பாதுகாப்பான புலம்பெயர்வு வழிமுறையில் ஈடுபடுவதற்கு உங்களுக்கு உதவும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதலுக்காக உங்கள் பிரதேச செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு உத்தியோகத்தரையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

#### புறப்படுதல்:

- உங்கள் கடவுச்சீட்டு, விசா/தொழில் அனுமதிப்பத்திரம், விமான பயணச் சீட்டு மற்றும் தொழில் ஒப்பந்தம் உள்ளிட்ட அனைத்து மூல ஆவணங்களையும் எடுத்துச் செல்லுங்கள்.
- உங்கள் புலம்பெயர்வு/வேலைவாய்ப்பு தொடர்பான ஆவணங்களின் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். அத்துடன் ஸ்கேன் செய்யப்பட்ட பதிப்புகளை டிஜிட்டல் முறையில் எடுத்துச் செல்லுங்கள். இந்த ஆவணங்களின் வரிசையில் தொழில் ஒப்பந்தம், கடவுச்சீட்டு, தொழில் சார்ந்த வரையறைகள், விசா, தொழில் வழங்குனரின் விவரங்கள், இலங்கை வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் விவரங்கள் போன்றவை இருக்கலாம்.
- அவசர தொடர்பு இலக்கங்களை கொண்டு செல்லுங்கள். அவற்றில் சேரும் நாட்டில் உள்ள இலங்கை தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கையில் உள்ள உறவினர் அல்லது நண்பர் மற்றும் சேரும் நாட்டில் வசிப்பவர் ஆகியோரின் தொடர்பு இலக்கங்கள் போன்றவை அடங்கலாம்.
- உங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலிலும் மற்றும் தொழில் இடத்திலும் மட்டுமே வேலை செய்யுங்கள். இலங்கையை விட்டு வெளியேறிய பிறகு சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவரை மாற்றுவது உங்களை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்பதுடன் அது உங்கள் உழைப்பைச் சுரண்டுவதற்கு வழிவகுக்கும். சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவர்களை மாற்றாமல் கவனமாக இருங்கள்.
- உங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருங்கள்.



### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவுசெய்து கொள்ளுதல்.

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டத்தின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயரும் இலங்கையர்கள் SLBFE இல் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகப் புறப்படும்போது SLBFE இல் பதிவு செய்வது விரும்பினால் செய்யலாம் அல்லது விட்டுவிடலாம் எனும் ஒரு விருப்பத்தேர்வு அல்ல. இலங்கை சட்டத்தின்படி அது கட்டாயமாகும். SLBFE இல் பதிவு செய்யும் செயன்முறையை மீறி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்ல யாராவது உங்களை ஊக்குவித்தால், அது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தயாராக வேண்டும் என்று உங்களுக்கு கூறும் எச்சரிக்கையாகக் கருதப்படலாம். வருகை விசாவில் சென்று வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு SLBFE இல் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வருகை விசாவில் புறப்படுவதற்கு முன்பு SLBFE பணியகத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் இந்த விவரங்களைப் பெறலாம்.

பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதறகாக, 077 441 0086 என்ற இலகத்தின் வாயிலாக புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) தொடர்பு கொள்ளவும்.

IOM
UN MIGRATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதை;

## 4 மாணவர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு,செப்.28

வயம்ப பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்ந்த மாணவனை பகிடிவதை செய்து, கடுமையான காயத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 4 மாணவர்களை யும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்று உத்தர விட்டது.

பாதிக்கப்பட்ட மாணவனைத் தனியிடத்துக்கு அழைத்துச் சென்று அவரது ஆடைகளைக் கழற்ற முயன்ற போது குறித்த மாணவன் எதிர்ப் புத் தெரிவித்ததால் அவரைத் தாக்கி யுள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கின்றது. (க-இ)

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் இயங்கி வரும் எமது புடைவை காட்சியறைக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ப ரூ 55000/- வரை சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 075 277 6441

**வேலையாட்கள் தேவை**

- சமையல் உதவியாளர் (Assistant Cook)
- தேநீர் தயாரிப்பவர் (Tea Maker)
- ரொட்டி தயாரிப்பவர் (Rotty Maker)
- உணவு பரிமாறுபவர் (Supplier)
- சிட்டை எழுதுநர் (Bill Clerk)

நேரில் வருகை தரவும்

**ஸ்ரீ நிகேத பவன்**
சைவ உணவகம்
163, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

(CS/30502) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 07 . 1950 — மறைவு 27 . 09 . 2025

### வல்லிபுரம் தனநாயகம்

கல்லாரை, மல்லாகத்தை பிறப்பிடமாகவும், தில்லைகட்டி வீதி (NSB Bank அருகாமை), சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தனநாயகம் அவர்கள் நேற்று (27.09.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், செல்வலட்சுமி (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்) இன் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வயிரவப்பிள்ளை - தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான வாகீஸ்வரி, உமாமகேஸ்வரன், ஜோகீஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரி (மல்லாகம்), காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், அம்பிகைபாகன், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், பாலசுப்பிரமணியம் மற்றும் செல்லையா, நடராசா, காலஞ்சென்றவர்களான ஆறுமுகநாதன், முருகையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தில்லைகட்டி வீதி
(NSB Bank அருகாமை),
சுன்னாகம்.

தொடர்புகளுக்கு:-
செ.கஜந்தன் - 077 596 1800
கோ.கஜனி - 077 358 1078

(CS/59526) J-1

(CS/59485) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 08 . 1934 — மறைவு 27 . 09 . 2025

### புவனேஸ்வரி சிவஞானம்

ஊர்காவற்துறை கரம்பனை பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி சிவஞானம் நேற்று (27.09.2025) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் செல்வப்புத்திரியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - ஞானியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, சிவஞானத்தின் அன்பு மனைவியும், பாஸ்கரசிங்கம், வசந்தகுமாரி, ரவிச்சந்திரன், கலைவாணி (முகாமையாளர் நல்லூர் பிரதேசசெயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்லக்கமலாசினி, யோகராஜேஸ்வரன், இந்துமதி, யோகக்குமார் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம், கிருஷ்ணசாமி, செகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், (கோப்பாய் மாமி) அஜிலா, அன்பரசன், அக்ஷன், லக்ஷன், ஹரிசங்கர், பூமிகா, கனிஸ்ரா, டெனிஸ்ரா ஆகியோரின் பேர்த்தியும், விகாசன், மகிலிசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 711 1205

பழைய வீதி, நாச்சிமார் கோவிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(CS/59524) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 09 . 1949 — மறைவு 24 . 08 . 2025

### சோமசுந்தரம் கமலநாதன்

சிவன் வீதி உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கமலநாதன் (24.09.2025) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சொர்ணம்மா (பாக்கியம்) தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - கமலாவதி தம்பதிகளின் மருமகனும், கருணைமலர் அவர்களின் கணவரும், காயத்திரி, கார்த்திகா ஆகியோரின் தந்தையும், மயூரன் அவர்களின் மாமனாரும், யஸ்மினா, டாவின் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், வாமதேவன் மற்றும் யோகேஸ்வரி (தேவி), ஞானேஸ்வரி (சகுந்தலா) காலஞ்சென்றவர்களான யோகநாதன் (கண்ணன்), இராஜேஸ்வரி (குஞ்சு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரி, இராஜலட்சுமி, துரைராஜா மற்றும் சிவஞானம், இராஜராஜேஸ்வரி, காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

தகவல் : குடும்பத்தினர்
021 223 0761

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆட்கள் தேவை

அளவெட்டியில் இயங்கும் பிரபல மொத்த சில்லறை வியாபார நிலையத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு ஆளணிதேவை
1. பில்கிளார்க் (ஆண்/பெண்)
2. சேல்ஸ்மன் (பொதி செய்பவர்கள்)
வேலை செய்யும் திறனுக்கு அமைய தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(காலை 11 மணி தொடக்கம் 1 மணி வரை தொடர்பு கொள்ளவும்)

தொடர்புகளுக்கு - 076 295 9564

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Receptionist(Night Shift) | : 0766248529 |
| Paper Quilling Artisan | : 0767781004 |
| Kitchen Cook & Helper | :0766248529 |
| Accounts Clerk | : 0775143819 |
| Customer Care | :0763242881 |
| Clinic Office Assistant | : 0752341811 |
| விற்பனை உதவியாளர் | : 0766350560 |
| Juice maker | : 0760709751 |
| Branch Manager | : 0778873493 |
| Waiter | : 0776525861 |
| CCTV Technician | : 0741428161 |
| Account Assistant | : 0779687961 |
| சிகையலங்கரிப்பாளர்(ஆண்கள்) | : 0773565155 |
| Sales Assistant | : 0777921777 |
| Cashier | : 0740943967 |
| Video Editor | : 0212221729 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக
யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :
dewmasweb.com

வேலையாட்கள் தேவையா?
0777733368

DEWMAS, 51, Amman Road, Nallur

## பணியாளர் தேவை

புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண்கள் வேலைக்குத் தேவை.
இடம்:TODAY SELECTION
கொக்குவில்.
விபரங்களுக்கு: 077 4848 028
(CS 4110) A

## சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
25 தொடக்கம் 55 வயதுக்கு உட்பட்ட நன்கொடையாளிகள் எதிர்பார்க்கப்படுகின்றது.
பெண், ஆண் இருபாலரும்..
நன்கொடையாளிக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு:
0776994880, 0761874464

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
நிர்வாகி

077 810 6857, 075 974 2495, 021 226 5551
www.valvaieldershome.com

## தேவை

ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள அரைக்கும் ஆலைக்கு பில்கிளாக், பொதியிடல் என்பவற்றிட்கு பெண் ஊழியர்கள் தேவை.
(அனுபவம் உள்ளவர்கள், பயிலுனர்)
சம்பளம் 2000/=
076 297 7078

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில்
அம்மாச்சிக்கு முன்பாக
8 பரப்பு 8 குழி காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 7280 268
(CS 4104) A



## ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் துஷ்பிரயோகத் தடுப்புப்பிரிவு திறப்பு

சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்புப்பிரிவு மற்றும் பொலிஸாருக்கான உணவகம் என்பன வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டன.

வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சீ.ஏ.தனபால இவற்றைத் திறந்து வைத்தார். ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்களது முறைப்பாடுகள் மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகண்டு பொலிஸாரின் சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் பொலிஸ் நிலையத்தில் குறித்த பிரிவு புதிதாக அமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகர, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன விஜயமுனி மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (க-110)

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 05 . 1969



மறைவு
26 . 09 . 2025

### சிவகலாநிதி கிருபாகரன்

வட்டுக்கோட்டை தெற்கைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகலாநிதி கிருபாகரன் அவர்கள் கடந்த (26.09.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கம் - இரத்தினேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், கிருபாகரனின் அன்பு மனைவியும், சங்கவி (லண்டன்), பிரணவன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுசன் (லண்டன்) அன்பு மாமியாரும், சிவநேசன் (கனடா), சிவமலர், சிவனேஸ்வரி (சுவீடன்), பிரதீபன், சிவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயகுமாரி (ஜேர்மனி), தயாபரன் (கனடா), ஈஸ்வரன், ஜெயகௌரி (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்), பிரபாகரன் (யாழ். பல்கலைக்கழகம்), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
கு.பிரபாகரன் - 075 546 1545
கி.பிரணவன் - 076 227 8424

தகவல்:
குடும்பத்தினர்
(CS/30506) J-1

## நெற்செய்கை வயல் விற்பனைக்கு

குஞ்சுபரந்தன் சந்தியில் இருந்து 100m தொலைவில், பூநகரி - பரந்தன் பிரதான வீதிக்கு இருமருங்கிலும் அமைந்த 11 ஏக்கர் இருபோக நெற்பயிர்ச் செய்கை வயல் தண்ணீர்ப் பங்குடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 767 7123

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண் / பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076 632 3554

## வேலையாள் தேவை

கொழும்பு 13 இல் பிரபல அழைப்பிதல் அச்சகத்திற்கு Coral Draw, Photo Shop தெரிந்த அனுபவமுள்ள பெண் Drsigner Njit Good Salary
தொடர்பு:
077 999 6779

## Wagon R Customz

புத்தம் புதிய Suzuki Wagon R custom Z 2025 விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 076 771 3636

## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 6 - 11 வரை கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் (தமிழ்/ஆங்கிலம்) மொழிமூலம் தனிப்பட்ட ரீதியாகவோ குழுக்களாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 447 3343
076 889 1321

## சிறந்த நிலம் விற்பனைக்கு!

- மீசாலை கிழக்கு - வீட்டு நிலம்
- அல்லாரை தெற்கு - வீட்டுடன் தென்னங்காணி

விலை பேசித்தீர்மானிக்கலாம்
தொடர்புகளுக்கு:-
077 6544 540
(CR/45765) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளாடைக்குள் 'ஐஸ்'; பெண்ணொருவர் கைது

உள்ளாடைகளில் ஐஸ் போதைப்பொருள் பைக்கெற்றுகளை மறைத்துக்கொண்டு கொண்டு சென்ற பெண்ணொருவரும் அவரது கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை மற்றும் நாவலப்பிட்டி பகுதிகளில் தம்பதியர் ஐஸ் பைக்கெற்றுகளை விட்டுச் சென்றுள்ளனர் எனக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்துக்கிடமான பெண்ணின் உள்ளாடைகளில் 52 ஐஸ் கைப்பெற்றுகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் முதற்கட்ட விசாரணைகளில் ஒவ்வொரு ஐஸ் பைக்கெற்றும் சுமார் 7 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. (ச-இ)

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் குமாரசாமி வீதியில் அறைகள் மாணவர்களுக்கு (ஆண்களுக்கு மட்டும்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 759 8708

(CS/59507) J-1

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை காந்திமதி



திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை கல்வயலை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை காந்திமதி 26.09.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரியப்பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான பிச்சைபிள்ளை - யோகம்மா தம்பதியின் மருமகளும் சின்னத்துரையின் (ஓய்வுபெற்ற நகரசபை கணக்காளர்) அன்பு மனைவியும், ஸ்ரீகாந்தன் (VMK), ஜெயகாந்தன் (நூலகர் - சாவகச்சேரி பிரதேசசபை), மாலதி, சிவகாந்தன் (கனடா), உமாகாந்தன் (London), ஸ்ரீவாணி (பிரதேச செயலகம் சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபாஷினி (ஆசிரியர் - கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியாலயம்), சந்திரவதனி, ஸ்ரீகணேஷ், தயாழினி (ஆசிரியர் - மீசாலை வீரசிங்கம்), பிரியா (London), சுதர்சன் (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆதித்தன், அட்சயன், ஜீவிகா, அஜய்காந், ஹரிஷ்காந், கஜநாத் (பிரான்ஸ்), ஷாருண், பிரணவி, லக்ஷாயினி, வர்ஷாயினி ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான காளியம்மா, மாரியம்மா, நாகம்மா, பஞ்சவர்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, மகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, மகாலிங்கம், பாக்கியம், நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வயல்
சாவகச்சேரி

தகவல்: பி.சின்னத்துரை (கணவர்)
077 967 3788, 077 491 3358, 077 891 8150

(CS 30507) E

## மரண அறிவித்தல்

தோற்றம்: 04 . 12 . 1950



மறைவு: 26 . 09 . 2025

### விக்ரர் அலெக்சாண்டர் (லோகநாதன்)

குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விக்ரர் அலெக்சாண்டர் (லோகநாதன்) அவர்கள் கடந்த (26.09.2025) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விக்ரர் - றீற்றம்மா தம்பதியரின் அன்பு மனனும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பற்றிமாறாணியின் அன்பு கணவரும், கொலிஸ்ரன் (SIS), யூடினா, சாலமோன், கிளிஸ்றபெல், கிளிஸ்றபோல், வெஸ்லி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினி, றெபேக்கா, பினகாஸ், சுமனா, சரணியா அன்பு மாமனாரும், லீஷா, தபி, கல்வின், றெசியா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல. 10/5 மத்திய கிழக்கு வீதி, குருநகரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (29.09.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
(CS/30509) J-1 மகன் - ராஜா- 077 270 6456

## மரண அறிவித்தல்

தோற்றம்: 15 . 01 . 1939



மறைவு: 25 . 09 . 2025

### பொன்னம்பலம் தங்கராசா

மலேசியா செரம்பானைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தங்கராசா (முன்னாள் நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க முகாமையாளர்) கடந்த 25.09.2025 வியாழக்கிழமை காலை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நல்லபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், தயானந்தன் (UK), ஜெயந்தினி (Germany), ஜெயந்தன் (Singapore), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ராதிகா (UK), விஜயசிறீலன் (Germany), வசுமதி (Singapore) ஆகியோரின் மாமனாரும், ஹறிணி, கிருஷ்ணி, கர்சனா, வர்ஷனன், வர்ஷிகா, சாதுர்யா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான சிவனேஸ்வரி (கனகம்மா), பொன்னம்மா ஆகியோரின ஆகியோரின் மைத்துனரும், நவரட்ணராணி, மனோன்மணி, காலஞ்சென்ற சிவராஜா மற்றும் விநாயகலிங்கம், வரதலட்சுமி, ரவீந்திரா, கருணாகரன், நிமலா, சுந்தரராஜன், சுகுந்தலாதேவி, சுகுமார், சுரேந்திரன், சுரேஸ்குமார் ஆகியோரின் சித்தப்பாவும், அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சீவரட்ணம் மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற தவமலர் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், காலஞ்சென்ற வதனலட்சுமி, வியாலாட்சி, காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் ஒன்றுவிட்ட மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 29.09.2025 திங்கட்கிழமை காலை 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 46318) E

தொடர்புகளுக்கு:
தயானந்தன் (மகன்) - +447897387778
ஜெயந்தினி (மகள்) - +4915771513180
ஜெயந்தன் (மகன்) - +6590030412
சிந்துசன் - +077 961 0074

தகவல்: குடும்பத்தினர்
ஆவரங்கால்

## மரண அறிவித்தல்

தோற்றம்: 12 . 11 . 1932



மறைவு: 25 . 09 . 2025

### சிதம்பரநாதன் திசைவீரசிங்கம்
(சிவனடியான் மாஸ்ரர்)

முன்னைநாள் கணித ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சீரணி நாகபூசணி அம்மன் ஆலயநிர்வாக சபையின் முது பெரும் உறுப்பினரும், அகில இலங்கை சமாதான நீதவானும் ஆகிய சிதம்பரநாதன் திசைவீரசிங்கம் அவர்கள் கடந்த (25.09.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - கனகம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், சுதுமலையை வசிப்பிடமாகவும் காலஞ்சென்றவர்களான K.S சுப்பிரமணியம் (KSS) - பூமணி தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாஜினி, காலஞ்சென்ற சியாமினி மற்றும் பிரேமினி, லோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (ரவி), சித்திவினாயககுமரன் (குமார்), சசிதரன் (சசி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நாகேஸ்வரி, தெய்வநாயகி ஆகியோரின் சகோதரரும், குணபாக்கியம், மனோரஞ்சிதம், சந்திரோதயம் மற்றும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், நரேந்திரன், சிறீதரன், சிவக்கொழுந்து, சிந்தாமணி, இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், பவித்திரா, ரம்யா, அபினா, அர்ச்சனா, மிதிலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

சைவசமய இறுதிக்கிரியைகள் அன்னாரின் சுதுமலை மனை முற்றத்தில் இன்று (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆரம்பித்து தகனக்கிரியைகள் தாவடி இந்து மயானத்தில் பிற்பகல் 01.30 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


மதவடி, சுதுமலை, மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்

கலாஜினி - +61 414 864 818
பிரேமினி - +44 798 399 9400
லோஜினி - +44 784 602 4558
மதுசூதனன் - +94 077 614 1099

(CS/4091) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் முதலாவது தேசிய
AI கண்காட்சி மற்றும் மாநாடு 2025
AI-இன் எதிர்காலத்தை அனுபவித்திடுங்கள்
கண்காட்சிக்கான நுழைவு இலவசம்
திகதி:
செப்டம்பர் 29 மற்றும் 30
நேரம்:
மு.ப. 9:00 - பி.ப. 6:00
இடம்:
மோனார்க் இம்பிரியல், கொழும்பு
மாநாட்டிற்கான நுழைவு சீட்டுக்களை பெற்றுக்கொள்ள:
WWW.AIEXPO.LK
PROUDLY PIONEERED BY:
SLT MOBITEL
SLASSCOM FITIS HUAWEI tech.one connex EGUARDIAN
NATIONAL AI EXPO

ஓம் நமசிவாய

## சிவானந்த குருகுலம், வேதசிவகாமப் பாடசாலை,

### திருக்கேதீஸ்வர ஆலயம், திருக்கேதீஸ்வரம்

**விண்ணப்பங்கள் கோருதல்**

சிவானந்த குருகுல வேதசிவாகமப் பாடசாலையில் அந்தணர் குல மாணவர் களுக்கான குருகுலக் கல்வி வழங்கப்படும். இதற்கான பாடத்திட்டங்கள் மற்றும் செயன்முறைப் பயிற்சிகள் தமிழ்நாடு தருமபுர ஆதினத்தால் வடிவமைக்கப்பட்டு வேத சிவாகமப் பண்டிதரும் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இக்கல்வித்திட்டம் ஐந்தாண்டுகள் விரிவுரைகள், செயன்முறைகள், உள்ளகப் பயிற்சி என்பன தருமபுர ஆதினம், தமிழ்நாடு, இந்தியாவினால் வழங்கப்படும்.

- சிவானந்த குருகுல வேதசிவாகம பாடசாலையால் வழங்கப்படும் பயிற்சி நெறிகள் ஐந்தாண்டுகளுக்கு முற்றிலும் இலவசமானது.
- உணவு, மருத்துவம், தங்குமிடம் மற்றும் நலச்சேவை வசதிகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- வழமையான பாடசாலை கல்வியை கற்கும் மாணவர்களுக்கும் அவர்களின் கல்வியைத் தொடர வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கப்படும்.
- வேத சிவாகக் கல்விக்கு மேலதிகமாக ஆங்கிலம், கணினி, சாஸ்திரக் கல்வி என்பன வழங்கப்படும். ஏற்கனவே திருக்கேதீச்சர ஆலயச்சூழலில் நடைபெற்று எதிர்பாராதவிதமாக கைவிடப்பட்ட குருகுலக்கல்வியைக் கற்ற மாணவர்களும் சிவானந்த குருகுல வேதசிவாகமப் பாடசாலையில் இணைந்து தமது கல்வியைத் தொடர்ந்து கற்க முடியும். இவர்களுக்கான வேதசிவகமக் கல்வி விடுபட்ட காலத்திலிருந்து தொடர ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சிவானந்த குருகுலக்கட்டமைப்பு மிகவும் இறுக்கமான நடைமுறைகளை கொண்டதும், தொடர்ந்து இக்கல்வியை வழங்கக்கூடிய கட்டமைப்பினை கொண்டதும் ஆகும். ஆகவே இக்கல்வியைப் பெற அனைத்து பிராமண குல மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பங்கள் யாவும் தங்கள் சுயவிபரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டு 19.10.2025 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னராக பதிவுத்தபால் மூலம் தலைவர், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை, திருக்கேதீச்சரம். என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ தங்கள் விண்ணப்பங்களை கையளிக்க முடியும்.

- **நேர்காணல் திகதி- 16.11.2025**
- **நேரம் - 2.00Pm - 5.00 Pm**
- **இடம் - சிவனருள் இல்லம், திருக்கேதீஸ்வரம்.**

(CS/59504) J-1

**தொடர்பு இலக்கங்கள்**

0718671113 (WhatsApp)
00447969488968 (WhatsApp)
0766556258

**இவ்வண்ணம்**

திருக்கேதீச்சர ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
தருமபுரம் ஆதீனம், தமிழ்நாடு, இந்தியா
அமரர். நமசிவாயம் குடும்ப நம்பிக்கை நிதியம்

**மணமகள் தேவை**

யாழ் இந்து குருகுலம் 1997 ல் பிறந்த திருவாதிரை நட்சத்திரம் Germany ல் வசிக்கும் (Germany Citizen) ஜேர்மனியில் SAP Consultant ஆக பணிபுரியும் Master in Machanical Engineering கல்வி தகமையுடைய மணமகனுக்கு நன்கு படித்த இந்து சைவ உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றோம். மணமகள் Vegiterian ஆக இருத்தல் வேண்டும்.

Whatsapp:- +49 1764 249 1310
077 138 2199

(CS/46312) J-1

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 4 1/2 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 439 3222

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அண்மித்ததாக சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.

தொடர்புகளுக்கு:-
071 536 0894

(CS/59418) J-1

**அறைகள் உடனடி வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 3 தனி அறைகள் தனி வழியுடன். 3 குளியலறைகளும் ஒரு சிறிய சமையலறை உடனான தொகுதி உடன் வாடகைக்கு

தொடர்பு: 077 315 0497

Y.M.C.A.
Estd. 1987

## YMCA Mullaithivu Vacancy Announcement

The YMCA Mullaithivu is seeking a dedicated and responsible individual to serve as Program Secretary. This position plays a key role in supporting the mission and activities of the YMCA, ensuring smooth coordination of its programs and events.

**Qualifications & Requirements:**

- Minimum G.C.E. A/L qualification.
- Additional academic or professional qualifications will be an advantage.
- Fluency in English (spoken and written).
- Strong IT knowledge and ability to use common office software.
- Must be a Christian.

**Duties & Responsibilities:**

- Coordinate and organise meetings, programs, and training sessions of the YMCA.
- Assist in planning, implementing, and monitoring community activities and events.
- Attend and actively participate in various YMCA events, workshops, and outreach programs.
- Maintain proper communication with the YMCA Board, staff, and members.
- Support the preparation of reports, correspondence, and documentation related to programs.
- Assist in developing partnerships with community stakeholders to strengthen YMCA initiatives.

**Other Information:**

**Salary: Negotiable.**

**Closing Date for Applications: 10th October 2025.**

**Applications should be sent to:**

**The President**
**YMCA Mullaithivu,**
**Kanukeni East, Mulliyawalai,**
**Mullaithivu.**
**Contact: 075 382 8899**
**Email: ymcamullaitivu@gmail.com**

(CS/4092) J-1

## கணினி அறிவு இலங்கையருக்கு மத்திமம்

கொழும்பு, செப் 28

இலங்கையில் மக்கள் மத்தியில் கணனி அறிவு தொடர்பில் புதிய ஆய்வு தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டில் 2024ஆம் ஆண்டில் 64.1% மக்கள் கணினி பயன்படுத்தத் தெரியாதவர்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நாட்டில் 5 பேரில் 2 பேருக்கு மட்டுமே கணினி அறிவு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டில் கணினி அறிவு விகிதம் இன்னும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## குருதிக்கொடை

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், கருகம்பனை இந்து இளைஞர் கழகம், கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், விநாயகனைத்தும் விருட்சமே இளைஞரணி ஆகியவற்றின் ஏற்பாட்டில் கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குருதிக் கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டது. (ம-66-40)

**காணியுடன் வீடு விற்பனைக்கு**

யாழ். சுன்னாகம் K.K.S வீதிக்கு அருகாமையில் பசிலன் வீதியில் பாவனைக்குரிய வீட்டுடன் 2 3/4 பரப்பு காணியுடன் தரமான உறுதிப்பத்திரங்களுடன் வீடு விற்பனைக்கு உண்டு. No Brockrs

S.P. Karan's: 077 343 4005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரம் பேணாமை; உணவகத்துக்குச் 'சீல்'

யாழ்ப்பாணம், செப்.28

பருத்தித்துறையில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத 3 உணவு கையாளும் நிலையங்கள் தொடர்பான வழக்கில் உணவக மொன்றுக்குச் சீல் வைத்து தண்டப்பணமும் விதித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத 3 உணவு கையாளும் நிலையங் களுக்கு எதிராகப் பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 3 உரிமையாளர்களும் தம்மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 37 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்ட துடன் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்தை உடனடியாக ல் வைத்து மூடுவதற்கு நீதிமன்று கட்டளையிட்டது.

(ச-26,100)

## அரச வரி...

கடந்த ஒன்பது மாத காலப்பகுதிக்குள் மூவாயிரத்து நானூறு பில்லியன் ரூபா வருமானத்தை அரசாங்கம் ஈட்டியுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆயிரத்து 545 பில்லியன் ரூபாவையும், இலங்கை சுங்கத் திணைக்களம் ஆயிரத்து 679 பில்லியன் ரூபாவையும், கலால் திணைக்களம் 176 பில்லியன் ரூபாவையும் வருமானமாக ஈட்டியுள்ளன.

ஏற்றுமதி மூலமான வருமானம் 11.6 பில்லியன் டொலராகவும், வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மூலமான அந்நிய செலாவணி உட்பாய்ச்சல் 5.1 பில்லியன் டொலராகவும், சுற்றுலாத் துறை மூலமாக 2.29 பில்லியன் டொலர் வருமானமும் கிடைத்துள்ளதாக மேலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம)

## பொதுமக்கள்...

மன்னாரில் இரண்டாம் கட்டமாக அமைக்கத் திட்டமிடப்பட்ட காற்றாலைகளை அகற்றக் கோரியும், கனிய மணல் அகழ்வுக்கு எதிராகவும் கடந்த 60 நாள்களாகப் பொதுமக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஜனாதிபதியின் செயலகத்துக்கு முன்பாகவும் போராட்டங்கள் இடம்பெற்றன. இந்த எதிர்ப்பையும் மீறி, காற்றாலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் நேற்று முன்தினம் இரவு மன்னாருக்குள் கொண்டு செல்லப்பட்டன.

காற்றாலை உபகரணங்களைக் கொண்டுசென்ற வாகனங்களை இடைமறித்துப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீதே பொலிஸார் கொடூரத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். பெண்கள், வயோதிபர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காற்றாலைகளுக்கு எதிரான போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் வகையில், போராட்டத்தில் ஈடுபட்ட சிலரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. பொலிஸாரின் தாக்குதல்களைக் கண்டித்து விரைவில் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு அறிவித்துள்ளது. அத்துடன், காற்றாலைக்கு எதிரான போராட்டம் தொடரும் என்றும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

(அ-ம-213)

## சிறுவர்...

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குச் சர்வதேசத்திடம் நீதி கோரி, வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் அரியாலை செம்மணிச் சந்திப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. இந்தப் போராட்டம் நாளை மாலையுடன் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், சிறுவர் தினமான ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி மாலைவரை போராட்டம் தொடரும் என்று புதுப்பிக்கப்பட்ட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 240 என்புத் தொகுதிகளில் (அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகள் 240. அவற்றில் மீட்கப்பட்டவை 239) கணிசமானவை சிறுவர்களுடையவையாகக் காணப்படுகின்றன. எனவே, இந்த என்புத் தொகுதிகளுக்கு நீதிகோரியே போராட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மன்னாரில் காற்றாலைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் நடத்திய கொடூர தாக்குதலுக்கும் போராட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றுக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

(அ-ம-20-66-26)

## அநுரகுமாரவின்...

புதிதாக உறுப்பினர்களை இணைக்கும் திட்டத்தை அண்மைக்காலமாக முன்னெடுத்து வருகின்றது. மொரட்டுமுல்ல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற உறுப்பினர் இணைப்பு நிகழ்வில் உரையாற்றும்போதே, அரசாங்கத்துக்கு எதிராக [illegible]களை சஜித் முன்வைத்துள்ளார்.

சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தினர் பொய்களாலும், குழப்பங்களாலும் மக்களை ஏமாற்றுவதில் வல்லவர்கள். இவ்வாறான ஏமாற்றுச் செயற்பாடுகளால் தம்மைத் தக்கவைத்துள்ளனர். 24 மணிநேரமும் இவ்வாறு பொய்பேசும் அரசாங்கம் இலங்கையில் இதுவரை இருந்ததில்லை. பொய்கள் மட்டும் தான் அரசாங்கத்தின் பிரதான கொள்கையாக மாறியுள்ளன.

அண்மைக்காலமாக போதைப்பொருள்கள் பெருமளவில் கைப்பற்றப்படுகின்றன. இது தொடர்பில் அரசாங்கத்தால் பல்வேறு பரப்புரைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருள் காரணமாக நாடும் சீரழிந்து வருகிறது. எனவே அவற்றை கண்டுபிடித்து அழிப்பது சிறந்த செயலாகும். அதேநேரம், துறைமுகத்தில் இருந்து அனுமதியில்லாமல் கொள்கலன்களை விடுவித்த விவகாரம் தொடர்பில் அரசாங்கம் மௌனமாக உள்ளது.

மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்துக்கு மக்கள் தீர்ப்பளிக்கும் நேரம் வந்துவிட்டது. மாகாணசபைத் தேர்தலில் பொய், மோசடி, குழப்பம், ஏமாற்றுதல் ஆகியவற்றைத் தோற்கடிக்குமாறு மக்களிடம் கோருகின்றோம் - என்றார். (அ-ம-இ)

## விஜய்யின்..

பரப்புரையின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 38 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

2026ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நேற்று கரூர், நாமக்கல் போன்ற இடங்களில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார். கரூரில் அவர் முன்னெடுத்த தேர்தல் பரப்புரையில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று திரண்டிருந்தனர். இதன்போது ஏற்பட்ட நெரிசல் காரணமாக 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களைத் தவிர, நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தமிழக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். இந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து, மருத்துவமனையிலும், பரப்புரை இடம்பெற்ற பகுதிகளிலும் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரையில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். முதல்வர் ஸ்டாலினின் உத்தரவுக்கு அமைய விசேட மருத்துவக் குழுவொன்று கரூர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம)

## நிதி...

ஒதுக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வரைவு நாடாளுமன்றத்தில் நேற்று பதில் நிதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோவால் சமர்ப்பிக்கப்பட்டது. அதில், 2026ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த செலவீனமாக 4 ஆயிரத்து 434 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அமைப்பின் படி, 634 பில்லியன் ரூபா நிதி நிதியமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு - செலவுத்திட்டத்தில் ஒரு துறைக்கு அல்லது அமைச்சு ஒதுக்கப்பட்ட அதிகபட்ச நிதியாக இது பதிவாகியுள்ளது.

நிதி அமைச்சுக்கு அடுத்தபடியாக உள்ளூராட்சி சபை மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு 618 பில்லியன் ரூபாவும், பொதுநிர்வாக அமைச்சுக்கு 596 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாதுகாப்பு அமைச்சுக்கு 455 பில்லியன் ரூபாவும், சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சுக்கு 554 பில்லியன் ரூபாவும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கு 301 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்;டுள்ளது.

வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி நிதி அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இது இரண்டாவது வாசிப்பாகக் கருதப்படும். இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை நடைபெறும். 14ஆம் திகதி மாலை 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 5ஆம் திகதி நடைபெறும்.

(அ-ம-44)

## நிறைவேற்று...

முதல்வர் பிரசாந்த லால் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துடன் இணைந்த முறையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும். இலங்கையின் அரசியல் வரலாற்றில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட இறுதி ஜனாதிபதியாக அநுரவே இருப்பார் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மையில் தெரிவித்துள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, இலங்கைக்கு நிறைவேற்று அதிகார முறைமை அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை சட்டக் கல்லூரியின் முதல்வர் பிரசாந்த லால் டி அல்விஸ் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பல்வேறு இனக்குழுக்களிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கும், வெளிநாட்டு செல்வாக்குகளைத் தடுப்பதற்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முக்கியமானது. எனவே, அதை ரத்துச் செய்வது தொடர்பில் சிந்திக்கக்கூடாது. அதேநேரம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வருபவர்கள், அந்த அதிகாரத்தை நல்ல முறையில் பயன்படுத்துவது அவசியம் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் :- 40,000/-
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்

(CS/30503) J-1

தொடர்பு:- 077 480 3379

## அகரம்

உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை

மலலாகம் | தொகுவில்

புதிய கல்வி ஆண்டு 2026

புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம்-06

தமிழ் மொழி மூல, English Medium
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை

அனுமதி வழங்கப்படுகிறது

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## உடனடி வேலைவாய்ப்பு

முழுநேரம் / பகுதிநேரம்
- Juice maker (யூஸ் தயாரிப்பாளர்)
- Snack maker (சிற்றுண்டி தயாரிப்பாளர்)

Gender: Male / Female (ஆண் / பெண்) அனுபவம் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
வேலை நேரம் : 7.00a.m - 6.30p.m
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும், சம்பளம் அதிகரிக்கப்படும்.
Location: Tharmi Rooms & Cafe
ஸ்ரான்லி ரோட், சிறம்பிறடி லேன், யாழ்ப்பாணம்.

(CS/59492) J-1

Contact:- 076 070 9751

## வாடகைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அருகில் 3 படுக்கையறை, ஹால், உணவறை, சமையலறை, குளியலறை, வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு.
முன்புறம் அலுவலக பயன்பாட்டிற்கு ஏற்றது.

(CS/59473) J-1

தொடர்புகளுக்கு:- 076 549 4906

## மணமகள் தேவை

1994 ம் ஆண்டு பிறந்த யாழ் இந்து (V) பூரட்டாதி நட்சத்திரம் கும்பராசி உடைய U.K குடியுரிமையுள்ள அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

(CS/59482) J-1

தொடர்புகளுக்கு:- 077 160 4896

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

(CS/59477) J-1

தொடர்புகளுக்கு:-
Whats app:-
+61 421 290 240


# கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிபட்டால் பகிரங்க ஏலம்!

### கமக்கார அமைப்பினர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், செப்.28

கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டால் 3 நாள்களுக்குள் உரிமை கோரப்படாதவிடத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படும் என்று கைதடி கமநல சேவை நிலையத்தினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு, நெல் முளைவிட ஆரம்பித்துள்ளதால், அனைத்துக் கால்நடைகளையும் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது கட்டாக்காலியாக அவிழ்த்துவிடப்படும் மாடொன்று பிடிபட்டால் பிடிகூலியாக 5 ஆயிரம் ரூபாவும், பராமரிப்புக் கூலியாக நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாவும், குற்றப்பணமாக ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும். ஆடு ஒன்றுக்கு பிடிகூலியாக மூவாயிரத்து ஐநூறு 500 ரூபாவும், பராமரிப்புக் கூலியாக நாளொன்றுக்கு 500 ரூபாவும், குற்றப்பணமாக 500 ரூபாவும் அறவிடப்படும்.

பயிர் செய்யும் நிலத்திலிருந்து 100 அடி தூரத்துக்குள் கட்டப்படும் ஆடு மாடுகளுக்கும் இது பொருந்தும் என்றும் கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

(க-159)


## காணி விற்பனைக்கு

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 794 8012

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில் காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்

தொடர்பு: 077 723 5740

## வேலையாட்கள் தேவை (ஆண்/பெண்)

- துப்புரவுப் பணியாளர்கள் (பெண்) (Room Cleaning)
- Bar Waiter, Room Boys

மேற்படி வேலைகளுக்கு சுபாஸ் விருந்தினர் விடுதிக்கு அவசரமாக தேவைப்படுகின்றது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/59466) J-1

தொடர்புகளுக்கு:-
074 374 3296

## காணிகள் விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தியில் இராச வீதியில் இருந்து 100m தூரத்தில் பிரதான வீதியோரமாக சிறந்த குடியிருப்புச் சூழல் 2, 2 1/2 மற்றும் 3 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட தேக்கு மரங்களுடன் கூடிய குடிமனைகள் அமைக்கக்கூடிய காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

(CS/30508) J-1

தொடர்புகளுக்கு:-
077 811 8461, 070 438 3910


## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 04 . 1930



மறைவு
20 . 09 . 2025

### நாகமணி பரதராஜா

(1930-2025)

ஏழாலையை பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற தலைமை புகையிரத பாதுகாவலர் நாகமணி பரதராஜா அவர்கள் கடந்த (20.09.2025) சனிக்கிழமை லண்டனில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தனலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகவதி அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்ற மனோகரன் மற்றும் மாலினி (டென்மார்க்), வசந்தி (லண்டன்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கெங்காதரன் (டென்மார்க்), சிறிஸ்கந்தன் (லண்டன்) சகிலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயா, கீர்த்தன், யதார்த்தன், அனந்திகை, அம்பிகை, அக்ஷிதா, அதிஷா ஆகியோரின் பேரனும், திவ்யா, அலோரா, சியாரா ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை, முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை லண்டலில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
மகன்: பிரபாகரன் : +1647449 1603
மகள்கள்: மாலினி : + 45 7181 5454
வசந்தி : +44 0753 3814857
மருமகள்: சகிலா : +1437 771 3305

தகவல்:
குடும்பத்தினர்

(CS/59523) JK


## வேலையாட்கள் தேவை

யாழ் நகர் ஸ்ரான்லி வீதியில் மாபிள் விற்பனை நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- சிட்டை எழுதுனர்
- காசாளர்
- விற்பனையாளர்
- களஞ்சியகாப்பாளர்
- தின கூலியாட்கள்

பகுதிநேர வேலை செய்ய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(CS/59497) J-1

தொடர்புகளுக்கு:-
Whatsapp:-
077 501 0821


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

நன்றுக கைநிறைய காசுவந்த ஆணவத்தில்
நன்றுக தன்தலையை நன்குயரத்தி – சென்றுரே
நன்றுன வீடும் வழுக்கிடவே நில்லாது
சென்றுரே பக்கத்து வீடு. .
பொன்.சுகந்தன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (28.09.2025) சிகரம் :158

# திலீபனின் முப்பத்தி எட்டாவது நினைவு நாளில் தமிழ்மக்களின் நிலை

நிலாந்தன்


அரசையா, ஈழத்தின் மூத்த நாடகவியலாளர்களில் ஒருவர். பிரிட்டிஷ் இராணுவத்தில் பணிபுரிந்தவர். அவருக்குள் இருக்கும் படைவீரன் எப்பொழுதும் நிமிர்ந்து நடப்பார். மீசையை மன்னர்களைப் போல முறுக்கி விட்டிருப்பார். தமிழரசுக் கட்சியின் சத்யாக்கிரகப் போராட்டத்தில் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் அவரும் ஒருவர். 1961இல் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒரு பிரபலமான ஒளிப்படம் உண்டு. அந்த ஒளிப்படத்தில் ஒரு சத்தியாக்கிரகி நிலத்தில் மல்லாக்க விழுந்து கிடக்கிறார். அவருடைய நெஞ்சுக்கு நேரே ஒரு சிப்பாய் துப்பாக்கியின் கத்திமுனையை நீட்டிக்கொண்டிருக்கிறார். அந்த ஒளிப்படத்தில் துப்பாக்கியால் குறிபார்க்கப்படும் சத்யாக்கிரகி அரசையாதான்.

1990 ஆம் ஆண்டு ஒரு கட்டுரை எழுதுவதற்காக அரசையாவோடு நீண்ட நேரம் உரையாடினேன். உரையாடலின் போக்கில் கேட்டேன் "இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் இந்த ஆயுதப் போராட்டத்தைப் பற்றி ஒரு சத்தியாக்கிரகியாக உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று. அவர் சொன்னார் "அன்றைக்கு நாங்கள் சத்யாக்கிரகத்தில் ஈடுபட்டபொழுது எங்களில் யாரும் சாகத் தயாராக இருக்கவில்லை. சத்யாக்கிரகத்தை சாகாமல் போராடும் ஒரு வழியாகத்தான் நாங்கள் விளங்கி வைத்திருந்தோம். ஆனால் திலீபன் சத்யாக்கிரகம் எனப்படுவது சாகும்வரை போராடுவது என்று நிரூபித்திருக்கிறார். அவரைப்போல 500 பேர் அந்தக் காலம் எங்களோடு இருந்திருந்தால் நாங்கள் அப்பொழுதே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம்" என்று.

திலீபனுக்கு முன்பு மட்டுமல்ல திலீபனுக்குப் பின்னரும் அன்னை பூபதியைத் தவிர்த்துப் பார்த்தால், அறவழிப் போராட்டங்களின் அல்லது ஜனநாயக வழிப் போராட்டங்களின் நிலைமை அதுதான். தங்களுடைய அரசியல் இலக்கை முன்வைத்து திலீபனைப் போல பூபதியைப் போல போராட யாரும் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் கடந்த 16 ஆண்டு கால தமிழ் அரசியலானது தேங்கிப்போய் நிற்கின்றது. திலீபனைப்போல போராடுவது என்பது சாகத் தயாராக இருப்பது என்ற பொருளில் இங்கு கூறப்படவில்லை. தமது அரசியல் இலட்சியத்துக்கு உண்மையாக இருப்பது;அதற்காக விசுவாசமாக. முழு நேரமாக. அர்ப்பணித்து உழைப்பது என்ற பொருளில்தான் இங்கு நான் அதைப் பயன்படுத்துகிறேன்.

திலீபனின் அல்லது தியாகிகளின் நினைவுகளைக் கௌரவிப்பது தியாகிகளின் நினைவுகளைத் தலைமுறைகள் தோறும் கடத்துவது என்பது எதற்காக? மிலன் குண்டெராவை மேற்கோளாக எடுத்துக்கொண்டு மறதிக்கு எதிரான போராட்டம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? இல்லை. தியாகிகளின் நினைவுகளைக் காவுவதும் தியாகிகளைப் போற்றுவதும் தியாகிகளின் நினைவுகளைத் தலைமுறைகள் தோறும் கடத்துவதும் எதற்காக வென்றால், அந்தத் தியாக முன்னுதாரணங்களை வைத்துப் போராடவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் அவ்வாறு தியாகம் செய்வதற்கும் போராடுவதற்கு யாரும் தயாராக இல்லாத ஓர் அரசியல் சூழலில் தமிழ்த் தேசிய அரசியலானது கட்சி அரசியலாக, தேர்தல் மைய அரசியலாக மாறிப்போயிருக்கும் ஒரு சூழலில், தியாகிகளை நினைவுகூர்வது என்பது ஒரு சடங்காக மாறக்கூடிய ஆபத்து எப்பொழுதும் இருக்கும்.

கடந்த 16 ஆண்டு கால தமிழ்த்தேசிய அரசியல் எனப்படுவது பெருமளவுக்கு தேர்தல் மைய அரசியல்தான். தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் இயக்கம் எதுவும் கிடையாது. எனவே முதலில் தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் என்னவாக இருக்கிறது என்பதனை விளங்கிக்கொள்ளவேண்டும்; ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுது இருப்பது கட்சி மைய அரசியல்தான். தேர்தல் மைய அரசியல்தான். எனவே கட்சிகளை அவற்றுக்குரிய கட்டமைப்புகளுக்கு ஊடாக பலப்படுத்துவதுதான் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுப்பதற்குள்ள சாத்தியமான வழி. கடந்த 16 ஆண்டுகளாக மக்கள் இயக்கத்தைப் பற்றி பலரும் கதைக்கலாம். தமிழ் மக்கள் பேரவை,தமிழ் மரபுரிமைப் பேரவை,பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான மக்கள் அமைப்பு,தமிழ்ப் பொது வேட்பாளர்,'அணையாவிளக்கு' போன்ற சில எழுச்சிகளுக்கும் அப்பால் தமிழ்த்தேசிய அரசியல் எனப்படுவது பெருமளவுக்கு கட்சி



மைய அரசியலாகத்தான் காணப்படுகிறது. ஆனால் அதிலும்கூட ஒழுங்காக இல்லை.

தமிழரசுக் கட்சியே அதற்குப் பெரிய உதாரணம். அது தான் உள்ளதில் பெரிய கட்சி.தன்னைத் தலைமை தாங்கும் கட்சியாகவும் கூறிக்கொள்கிறது. ஆனால் இப்பொழுதும் நீதிமன்றத்தில்தான் இருக்கின்றது. பதில் தலைவர்.பதில் செயலாளர் என்ற பதிலாளிகளோடு உள்ள அந்தக்கட்சி, ஏனைய கட்சிகளோடு ஒருங்கிணைந்து போவதற்கோ ஒரு பலமான ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கோ தயாரில்லை. சிவில் சமூகங்களை அது எரிச்சலோடு பார்க்கின்றது. ஆனால் கடந்த 16 ஆண்டுகளிலும் நிகழ்ந்த மேற்சொன்ன எழுச்சிகள் யாவும் கட்சிகளுக்கு வெளியே இருந்து ஒருங்கிணைக்கப்பட்டவைகள்தான். அவற்றில் கட்சிகளும் இணைந்தன.

இத்தகையதோர் பின்னணியில் உள்ளதில் பெரியதும் தன்னைத் தலைமைதாங்கும் சக்தி என்றும் கூறிக்கொள்ளும் தமிழரசுக் கட்சியின் தோல்விதான் கடந்த 16 ஆண்டு காலத் தேக்கம் எனலாம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி பெற்ற ஆசனங்களுக்கு நிகராக அரசாங்கம் ஆசனங்களைப் பெற்றது. அது ஐ.நா.வில் எதிரொலிக்கின்றது.

இந்தத் தேக்கத்தை உடைத்துக் கொண்டு புதிய வழியைத் திறப்பது என்றால் ஏனைய கட்சிகள் குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னை ஒரு பெரிய கட்சியாக வளர்த்துக் கொள்ளவேண்டும். தன்னைக் கொள்கை சுத்தமான கட்சி என்றும் விசுவாசமாக தியாகிகளைப் பின்தொடரும் கட்சி என்றும் கூறிக்கொள்ளும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது கடந்த 16 ஆண்டுகளாக ஒரு கட்சியாக தன்னையும் பலப்படுத்திக்கொள்ளத் தவறியிருக்கிறது. தமிழ் மக்களையும் ஒரு தேசமாகத் திரட்டத் தவறியிருக்கின்றது. தமிழரசுக் கட்சியைக் குறை கூறிக் கொண்டிருப்பதனால் மட்டும் தமிழரசியலைச் சரிசெய்து விடமுடியாது. தமிழரசுக்கட்சி பெற்றிருக்கும் முதன்மையை, பலத்தை எப்படிப் பெறுவது என்று முன்னணி சிந்தித்துச் செயற்படவேண்டும். கடந்த 16 ஆண்டு காலத் தோல்விகள் தேக்கங்களில் இருந்து கற்றுக்கொண்டு புதிய வழிகளைக் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

தியாகிகளைக் கௌரவிப்பது என்பது அல்லது தியாகிகளின் நினைவுக்கு மரியாதை செய்வது என்பது விடுதலைப்புலிகளுக்கு பின்னரான தமிழ்த்தேசிய அரசியலில் ஒரு பலமான மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவது மட்டும்தான். ஆனால் அப்படி ஒரு தமிழ்த் தேசியப் பேரியக்கத்தைக் கட்டியெழுப்ப முன்னணியால் முடிய வில்லை. தமிழரசுக் கட்சி அதைச் செய்யும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இத்தகைய தோல்விகரமான பின்னணியில், தேக்கத்தின் பின்னணியில், தியாகிகளை நினைவு கூர்வது என்பது கட்சி அரசியலாக ஒரு சடங்காக மாறும் ஆபத்து எப்பொழுதும் உண்டு. திலீபனின் நினைவு நாட்களின் பின்னணியில்,கடந்த வாரம் லண்டனில் மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் இயற்கை எய்தினார். அவர் யார் என்றால், திருகோணமலையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒரு மாணவனின் தகப்பன். தன் மகனுக்கு நீதிகேட்டு அவர் போகாத இடமில்லை. ரணில்– மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில் , இந்தப் படுகொலைச் சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட படையினரில் ஒரு பகுதியினர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். தன் மகனுக்கு நீதி கிடைக்குமா என்று ஏக்கத்தோடு மருத்துவர் மனோகரன் தன் இறுதி மூச்சை விட்டிருக்கிறார். காணாமல்போன தமது பிள்ளைகளைத் தேடிக்கொண்டிருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட முதிய பெற்றோரும் அவ்வாறு உடைந்த இதயத்தோடு, அவநம்பிக்கையோடு இறந்துவிட்டார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் அப்பாவித்தனமாக எதிர்பார்ப்போடு பார்க்கும் ஐ.நா. மன்றத்தில் இம்முறை ஜெனிவாத் தீர்மானம் பெருமளவுக்கு நீர்த்துப்போகக் கூடிய ஆபத்து இருப்பதாக கொழும்புமைய லிபரல் ஜனநாயகவாதிகளான ஜெகன்

**தியாகிகளைக் கௌரவிப்பது என்பது அல்லது தியாகிகளின் நினைவுக்கு மரியாதை செய்வது என்பது விடுதலைப்புலிகளுக்குப் பின்னரான தமிழ்த்தேசிய அரசியலில் ஒரு பலமான மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவது மட்டும்தான். ஆனால் அப்படி ஒரு தமிழ்த்தேசியப் பேரியக்கத்தைக் கட்டியெழுப்ப முன்னணியால் முடியவில்லை. தமிழரசுக் கட்சி அதைச் செய்யும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.**

பெரேரா போன்றவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். தமிழ்க் கட்சிகள் செம்மணி திறந்துவைத்திருக்கும் புதிய சாத்தியவழிகளின் ஊடாக தமிழ் அரசியலை நகர்த்தப்போகின்றன என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்க, உலக சமூகம் இலங்கையில் பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை செம்மணிக்கூடாகப் பார்க்கவில்லை என்பதுதான் ஐ.நா. யதார்த்தமா? மருத்துவர் மனோகரன் நீதியைக் குறித்த நம்பிக்கை இழந்தவராக இறந்துபோயிருக்கும் ஒரு காலச்சூழலில், ஐ.நா. தீர்மானம் நீர்த்துப்போகக்கூடிய ஏது நிலைகள் அதிகரித்துவருகின்றன. இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் அரசையா கூறியதுபோல திலீபனைப் போல உண்மையாகப் போராடத்தக்க சத்யாக்கிரகிகளுக்குத் தட்டுப்பாடு உள்ள அரசியற்சூழலில், கட்சிகள் தங்களுக்கு இடையே பிடுங்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு துர்ப்பாக்கியமான அரசியற் சூழலில், நீதிக்கான தமிழ் மக்களின் கோரிக்கைகள் மேலும் பலவீனமடையும் ஓர் அனைத்துலகச் சூழலில், திலீபனின் முப்பத்தி எட்டாவது நினைவு நாளும் கடந்து போனது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அநுரவின் ஐ.நா. உரையும் சர்வதேச அரசியல் பின்னணியும்!

அ.நிக்ஸன்

ஜெனிவாவில், மனித உரிமைகள் பேரவையில் இலங்கைத் தீவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் பற்றிய சர்வதேச விசாரணை என்று தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வரும் பின்னணியில், 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பைக் காப்பாற்றும் முயற்சியிலேயே மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் தீவிரமாக ஈடுபடுகின்றன. அத்துடன் 1920 இல் ஆரம்பித்த சிங்கள - தமிழ் முரண்பாடுகள், முப்பது வருட அஹிம்சைப் போராட்டத்தின் மூலமும், முப்பது வருட ஆயுதப்போராட்டத்தின் ஊடாகவும் தீர்க்கமுடியாமற் போன சந்தர்ப்பங்களில், 2009க்குப் பின்னரான கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக தமிழ் இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை அவசியம் எனத் தமிழர்கள் கோருகின்றனர்.

இந்தப் பின்புலத்தில், மேற்கு - ஐரோப்பிய நாடுகள் இலங்கையின் பக்கம் நிற்பதை அவதானிக்க முடிகிறது. இந்தியாவும் அதற்கு விதிவிலக்கு அல்ல. ரஷ்ய - உக்ரைன் போர், இஸ்ரேல் - காஸா போர் மற்றும் அமெரிக்காவின் பொருளாதார வரிகள் உள்ளிட்ட பல விவகாரங்களுக்கு மத்தியில் உலக அரசியல் சமநிலை தற்போது குழப்பமடைந்துள்ளது. இதன் காரண காரியமாக சிறிய நாடு ஒன்றைக்கூட தங்கள் வசம் வைத்திருக்கவேண்டும் என்ற உத்தியை மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் வகுத்துள்ளன. டொனால்ட் ட்ரம்ப்பும் அந்த நிலைப்பாட்டில்தான் இயங்குகிறார். இங்கே, வல்லரசுகளின் இந்தப் போட்டித் தன்மைகளை சிங்கள அரசியற் தலைவர்கள் நன்கு புரிந்து கையாளுகின்றனர். பலஸ்தீனம் தனிநாடு அதாவது இரு அரசுத் தீர்வு முறைக்கு எப்போதோ அங்கீகாரம் பெற்றுவிட்டது. ஆனாலும், அமெரிக்க அழுத்தங்கள் மற்றும் சர்வதேச புவிசார் அரசியல் நலன்கள் அடிப்படையில் பலஸ்தீன விவகாரம் முடிவின்றி நீடிக்கிறது என்பதே உண்மை. அதேநேரம் பலஸ்தீன விவகாரத்துக்கு 'இரு அரசுத் தீர்வு'என ஏற்கனவே கூறிய சர்வதேச நாடுகள்கூட மனதளவில் அதனை முழுமையாக விரும்பவில்லை என்பது மற்றொரு உண்மை.

இந்த ஊடாட்டங்களுக்கு மத்தியில் சர்வதேச அரசியல் நலன்கள் என்ற தன்மையை ஆழமாக அறிந்து குறிப்பாக சமகால புவிசார் அரசியல் பொருளாதாரப் போட்டி சூழலுக்கு ஏற்ப, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கவேண்டும் என்று ஐ.நா.வில் கூறியிருக்கிறார். மஹிந்த ராஜபக்சவும் அதிகாரத்தில் இருக்கும்போது அவ்வாறு கூறியிருந்தார். 2015ஆம் ஆண்டு நல்லாட்சி எனக் கூறப்பட்ட மைத்திரி - ரணில் ஆட்சியிலும் பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் கோரிக்கை இலங்கையால் விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் அது இலங்கை அரசின் பலஸ்தீனம் பற்றிய உண்மையான அரசியல் பார்வையல்ல. இருந்தாலும், பலஸ்தீனம் தனி நாடு உருவாகவேண்டும் எனக் கூறுவது 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பின் ஓர் உத்தி. அதாவது ஈழத்தமிழர் விவகாரத்தில் அமெரிக்க-இந்திய அரசுகளைத் தொடர்ந்து தம் பக்கம் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கில் கையாளப்படும் அரசியல் அணுகுமுறை அது. குறிப்பாக அமரிக்கா போன்ற மேற்கு நாடுகளும் அயல் நாடான இந்தியாவும் இஸ்ரேல் ஆதரவு நிலையில் செயற்படும் பின்னணியில், சிறிய நாடான இலங்கைத்தீவின் ஜனாதிபதி ஒருவர் ஐ.நா. கூட்டத்தில் பலஸ்தீனம் தனிநாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனப் பேசியிருப்பது அரசியல் ரீதியான தேவைகளின் அடிப்படை என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

உலக அரசியல் ஒழுங்குகள் குழப்பமடைந்துவரும் ஒவ்வொரு சூழலிலும் இலங்கை ஜனாதிபதிகள் அவ்வாறான இராஜதந்திரப் பேச்சை முன்னெடுப்பது வழமை. இதற்கு அநுரகுமார திஸாநாயக்கவும் விதிவிலக்கல்ல. அதற்கான பிரதான காரண - காரியம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து ஈழத்தமிழர் விவகாரத்தை முற்றாக நீக்கம் செய்து உள்ளக விசாரணைப் பொறிமுறையாக மாற்ற வேண்டும் என்ற நோக்கம் தான். அதற்கு மேற்கு-ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம். அதுவும் இந்தியா மிகவும் தேவையான ஒரு நாடு.

ஆகவே சர்வதேச அளவில் அந்த நாடுகள் தற்போது கொண்டுள்ள பலஸ்தீனம் தொடர்பான அரசியல் கொள்கைக்கு மாறான கருத்து ஒன்றை உலக அரங்கில் பகிரங்கப்படுத்தினால், உடனடியாக அந்த நாடுகள் இலங்கையை நோக்கி அவதானம் செலுத்தும் என்ற நம்பிக்கை சிங்கள அரசியற் தலைவர்களிடம் உண்டு.



இந்த அவதானம் என்பது, இலங்கை ஒற்றை ஆட்சி அரச கட்டமைப்பைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டும் என விரும்பும் சிங்கள அரசியற் தலைவர்களின் நோக்கங்களை நிறைவேற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் இந்தியா ஊடாகக் காய் நகர்த்த முற்படும் சந்தர்ப்பத்தை உருவாக்கும்.

கடந்த காலங்களிலும் சிங்கள அரசியற் தலைவர்கள் இவ்வாறான அரசியல் காய் நகர்த்தல்களை கன கச்சிதமாகச் செய்திருக்கின்றனர். இதனை மேலும் அழுத்தம் திருத்தமாகச் சொல்வதானால், 1994 ஆம் ஆண்டு சந்திரிகா பெரும் வெற்றிக் கோசத்துடன் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட காலம் முதல், இன்றைக்கு அநுரகுமார திஸாநாயக்க வரையும் நீட்சியடையும் பிரதான அரசியல் உத்தி இது.

ஏனெனில் தமிழின அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை என்பதில் இந்திய மத்திய அரசுக்கு உடன்பாடு இல்லை. சீனாவை மையப்படுத்திய இந்தோ -பசுபிக் விவகாரத்தில், அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியாவுடன் பனிப்போர் நிலவினாலும், ஈழத் தமிழர் விவகாரத்தில் அந்த நாடுகள் இந்தியாவைக் கடந்து எந்த ஒரு முயற்சியிலும் ஈடுபடாது என்பதற்கு கடந்த காலச் செயற்பாடுகள் உதாரணமாகும். இவற்றையெல்லாம் அறிந்தே சிங்கள அரசியற் தலைவர்கள் செயற்படுகின்றனர். கட்சி அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் மஹிந்த சமரசிங்க, அமரர் மங்கள சமரவீர, ரணில் விக்கிரமசிங்க, பேராசிரியர் பீரிஸ், மிலிந்த மொறகொட போன்றவர்கள் சிங்கள அரசியல்வாதிகள் என்பதற்கும் அப்பால், ஈழத்தமிழர் விவகாரத்தை சர்வதேச அரங்கில் மிக நுட்பமாகக் கையாளும் சிறந்த இராஜதந்திரிகளாவர். இந்தியாவைக் கையாள மிலிந்த மொறகொட வகுத்துள்ள அரசியல் உத்திகளையே அநுரகுமார திஸாநாயக்க தற்போது நன்கு பயன்படுத்துகிறார் என்பது வெளிப்படை.

இதனை மையமாகக்கொண்டே அநுரகுமார திஸாநாயக்கா பலஸ்தீனம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை துணிந்து ஐ.நா.வில் கூறியிருக்கிறார். இது மேற்குஐரோப்பிய நாடுகளுக்குப் புரியாத புதிர் அல்ல. ஆனாலும் இந்தோ-பசுபிக் விவகாரத்தில் இலங்கைத்தீவு முக்கியமான ஒரு தளமாக இருப்பதை கருத்திற்கொண்டு சிங்கள அரசியற் தலைவர்கள் விரும்புகின்ற இலங்கை ஒற்றையாட்சி கட்டமைப்பை நியாயப்படுத்தும் அரசியல் செயன்முறைகளுக்கு ஆதரவு வழங்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்பதே உண்மை.

## இனஅழிப்புக்கு சர்வதேச நீதி விசாரணை கோரப்படும் நிலையில், இலங்கை இராணுவத்துக்கு ஐ.நா. பயிற்சி

உதாரணமாக, வடக்கு -கிழக்கில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் இன அழிப்புக்கான சர்வதேச நீதி கோரி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் இராணுவ ஒருங்கிணைப்புப் பாடநெறிக்கு இலங்கை இராணுவம் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. கொழும்பில் உள்ள அமைதி காக்கும் பணிக்கான நடவடிக்கை பயிற்சி நிறுவனத்தில் இந்த மாதம் 8 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட பாடநெறியின் நிறைவு விழா இந்த மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்றிருக்கிறது.

இன அழிப்பு அல்லது போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடுகளின் இராணுவத்தினர் ஐ.நா.வின் இப்படியான பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படுவதில்லை. ஆனால் 2009க்குப் பின்னரான சூழலில் பல சந்தர்ப்பங்களில் இப் பாடநெறிகள் மற்றும் சர்வதேச கூட்டுப் பயிற்சிகளுக்கு இலங்கை இராணுவம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றது. இருந்தாலும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச அமைப்புக்கள் இலங்கை இராணுவம் தொடர்பாக பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கின்றன. ஜெனிவாத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை இராணுவ உயர் அதிகாரிகளுக்கு பயணத்தடைக் கூட விதிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள்கூட பயணத்தடை விதித்திருக்கிறன.

ஆகவே மிலிந்தமொறகொட, பேராசிரியர் ரொஹான் குணவர்த்த போன்றவர்கள் சர்வதேச அளவில் இலங்கை இராணுவம் தொடர்பாக மேற்கொள்ளும் தொடர் பிரசாரங்களில் ஐ.நா. நம்பிக்கை கொண்டுள்ளது என்பதையே இது வெளிப்படுத்துகிறது. குறிப்பாக தமிழர்கள் இன அழிப்புக்கு உள்ளாகின்றனர் என்று பிரகடனப்படுத்தியுள்ள கனடா அரசின் ட்ரேசி மார்டினோ என்ற இராணுவ நிபுணர் பயிற்சிக் குழுவுக்கு தலைமைதாங்கியமை அதனை கோடிட்டுக் காண்பிக்கிறது. இந்தப் பாடநெறியில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 20 அதிகாரிகள், இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 2 அதிகாரிகள், இலங்கை விமானப்படையைச் சேர்ந்த 2 அதிகாரிகள், பங்களாதேஷ், பிஜி, இந்தோனேசியா, மொங்கோலியா, நேபாளம் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 09 வெளிநாட்டு அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஆர்ஜெண்டினாவைச் சேர்ந்த விக்டர் மானுவல் நுனேஸ் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பிரிகேடியர் ஜெனரல் நரேஷ் சுப்பா ஆகியோர் பிறபாட நிபுணர்களாகப் பணியாற்றினர்.




ஆகவே அநுர அரசாங்கத்தை முன்னேற்றி, இந்தோ -பசுபிக் பிராந்தியத்தில் தமது புவிசார் அரசியல் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதே மேற்கு - ஐரோப்பிய நாடுகளின் நோக்கமாக உள்ளது. ஐ.நா. இலங்கையின் நலன்களுக்கு ஏற்ப ஒத்துழைப்பு வழங்கும் என, ஐ.நா.வின் இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரான்ஸ், அநுரகுமார திஸாநாயக்கா ஜனாதிபதியாக தெரிவான சிலநாள்களில் சந்தித்த போது கூறியதை தமிழர்கள் நினைவிற் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கைமுறைக் கருக்கட்டலும் அறிந்திருக்க வேண்டியவையும்

பகுதி 2





**மருத்துவ நிபுணர் சி.ரகுராமன்**
பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

**செயற்கை முறையில் கருக்கட்டலின் (IVF) படிமுறைகள்.**

செயற்கைமுறைக்கருக்கட்டற் சிகிச்சையானது (IVF)பல படிமுறைகளைக் கொண்டது. இந்தக்கட்டுரையில் IVF சிகிச்சையின் விரிவான படிநிலைகளை எளிதாகப் புரிந்து கொள்ள வாய்ப்புப் பெறுவீர்கள். செயற்கை முறையிற் கருத்தரிப்பு என்பது பல முக்கியமான கட்டங்களைக் கொண்ட மருத்துவச் செயல்முறை ஆகும். இந்தச் சிகிச்சையைப் பெற இருப்பவர்கள் சிகிச்சை முறை பற்றி முழுமையான அறிவுடன் இருப்பது அவசியம். இது பாதுகாப்பானதும், பக்கவிளைவுகள் இல்லாத சிகிச்சை முறையாகும்.

அடிப்படைச் சிகிச்சை முறையை விட அதிகூடிய எண்ணிக்கையிலான முட்டைகளை கட்டுப்படுத்தப்பட்ட அளவில் சரியான மருத்துவக்கண்காணிப்புடன் சூலகத்தில் விருத்தியடையச் செய்தல் இந்தச் சிகிச்சையின் முதற்கட்டமாகும்.

முட்டை விருத்தியைத் தூண்டும் மருந்துகள் பொதுவாக ஊசி மூலம் வழங்கப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் செயற்கை முறைக்கருக்கட்டல் சிகிச்சைகளில் குளுர்இ டுர் போன்ற ஹோர்மோன்கள் ஊசி மருந்துகளாகப் பயன்படுத்தப்படும். இந்த ஊசி மருந்துகள் மாதவிடாய் ஏற்பட்டு இரண்டாம் நாளிலிருந்து ஏற்றப்படுவதுடன் முட்டையின் விருத்தியானது ஸ்கான் மற்றும் குருதியில் உள்ள ஈஸ்ரோஜன் ஹோர்மோன் அளவின் அடிப்படையிற் கண்காணிக்கப்படும். இந்தச்சிகிச்சையை நிலைத்திறனாக மேற்கொள்வதற்கு கட்டுப்படுத்தப்பட்ட அளவில் முட்டைகளை விருத்தி செய்வதற்கும் மேற்குறிப்பிட்ட மருத்துவக்கண்காணிப்புகள் உதவுகின்றன.

**மிக அரிதாகவே மிக அதிகமான எண்ணிக்கையில் முட்டை விருத்தியாவது தூண்டப்படும் நிலைமை (Ovarian hyper sitmulation syndrome) ஏற்படும். இந்நிலைமை உடலில் ஏற்படும் சில மாற்றங்கள் மற்றும் ஸ்கான் ஊடாகக் கண்காணிக்கப்படும். தொடர்ச்சியான வயிற்று வலி, வாந்தி,தலைச்சுற்று போன்றவற்றை உடலில் ஏற்படும் மாற்றங்களாக குறிப்பிடலாம். அவ்வாறு ஏற்படும் போது மருத்துவர் அதற்கான சிகிச்சையை மேற்கொள்வார்.**

## கருமுட்டை சேகரிக்கும் முறை

ஸ்கான் மற்றும் குருதியில் உள்ள Oestrogne அளவு பரிசோதனைகள் மூலம் முட்டை விருத்தியாவது உறுதி செய்யப்பட்டவுடன், அண்ணளவாக 14-16ஆம் நாளில் பெரும்பாலும் பூரண மயக்கத்தின் பின்னர் ஸ்கான் வழிகாட்டலுடன் சூலகத்தின் விருத்தி அடைந்த முட்டைகள் எடுக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் பகுதி மயக்கத்தின் மூலம் முட்டையை எடுக்க முடியும். இது ஒரு பாதுகாப்பான இலகுவான சத்திர சிகிச்சையாகக் காணப்படுவதுடன், பெரும்பாலும் பிரச்சினைகளை ஏற்படுத்துவது இல்லை. ஆயினும் மிக அரிதான சில சந்தர்ப்பங்களில் கிருமித் தொற்று குருதிப்போக்கு போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதும் உண்டு. அவ்வாறாக ஏற்படும் சந்தர்ப்பங்களில் இதற்கான தீர்வுகள் மருத்துவ நிபுணரால் வழங்கப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முட்டை எடுக்கப்பட்டு 4 - 6 மணித்தியாலங்களின் பின்னர் பெண்கள் வீடு செல்லமுடியும்.

## விந்துகள் பெறப்படும் முறை

விந்துகள் சுய இன்பம்(masturbation) மூலம் பெறப்படும். சுய இன்பம் கடினமாக உள்ள ஆண்களில் சில தூண்டப்படும் கருவிகளின் (vilprator) உதவியுடன் சுய இன்பம் தூண்டப்பட்டு சுக்கிலப்பாய மாதிரி சேர்க்கப்படும். மிகக் குறைவான விந்து உற்பத்தி உள்ளவர்கள் மற்றும் விந்துகள் பின்னோக்கி சிறுநீர்ப்பையினுள் கடத்தப்படுபவர்களிலும் ஊசி மூலமாக விதை மற்றும் விதைமேற்றிணிவிலிருந்து இந்த மாதிரிகள் சேகரிக்கப்படலாம்.


இந்த நுண் சத்திரசிகிச்சைகள் மயக்க மருந்துகளின் உதவியுடன் சனனி மற்றும் சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர்களின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்படும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தச் சத்திரசிகிச்சைகளில் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. எனினும் அரிதாக கிருமித்தொற்று, வலி,இரத்தப்போக்கு போன்றவை ஏற்படும். இந்தச்சந்தர்ப்பங்களில் அதற்குரிய தீர்வுகள் உடனடியாக மருத்துவர்களினால் மேற்கொள்ளப்படும்.

**ஆய்வு கூடத்தில் கருக்கட்டலும் வளர்த்தலும் (Fertilization and embryo culture)**

முட்டைகள் சூலகத்திலிருந்து எடுக்கப்பட்டு முதிர்ச்சி நிலை மற்றும் தரம் போன்றன ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டு முதிர்ச்சியடைந்த தரமான முட்டைகள் சிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்படும். சுக்கிலப்பாய மாதிரியில் இருந்து விந்துகள் தனிமைப்படுத்தப்பட்டுத் தயார் செய்யப்படும். ஆய்வுகூடத்தில் கருக்கட்டல் முறையானது பொதுவாக இருவகைகளில் மேற்கொள்ளப்படும். முதலாவது பாரம்பரிய முறையான IVF ஆகும். இதன்போது தரமான, அசையும் தன்மையுள்ள விந்துகள் தெரிவு செய்யப்பட்டு வளர்ப்பூடகத்தில் முட்டையுடன் பேணப்படுவதன் மூலம் கருக்கட்டப்படுகின்றது.

இரண்டாவது நவீன ICSI முறையாகும் இதன்போது தரமான, அசையும் தன்மையுள்ள ஒரு விந்தணுவானது தெரிவு செய்யப்பட்டு முட்டையினுள் செலுத்தப்படுவதன் மூலம் கருக்கட்டப்படும். தம்பதியினரில் காணப்படும் பிரச்சினைகள் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முறைகளில் ஒன்று தெரிவுசெய்யப்படும். ஆயினும், தற்போது பெரும்பாலான ஆய்வு கூடங்களில் ICSI முறையே பயன்படுத்தப்படுவதுடன் இது IVFI விடக் கருக்கட்டல் வீதம் கூடிய முறையாகவும் காணப்படுகின்றது. பின்னர் கருக்கட்டல் நடைபெற்றதை ஆய்வுகூடத்தில் உறுதிப்படுத்தி உருவாகும் கருவானது, வளர்ப்பூடகத்தில் சிறப்பான சூழ்நிலைகளில் (incubatorDs) 5 நாட்கள் வரை வளர்க்கப்பட்டதன் பின்னர் கருப்பையினுள் மாற்றீடு செய்யத் தயாராகக் காணப்படும்.

## கருவை கருப்பையினுள் இடம் மாற்றுதல் (Embryo transfer)



கருவானது கருப்பைக்கு மாற்றப்படுவதற்கு 5 நாட்களுக்கு முன்னராகவே. கருப்பையானது ஹோர்மோன்களினால் கரு உட்பதித்தலுக்காகத் தயார் செய்யப்படும். இந்த ஹோர்மோன்கள், குறிப்பாக (progestrone) இயற்கையான கரு வளர்ச்சிக்காக உடலில் சுரக்கப்படும் ஹோர்மோன்களாகும். இவற்றைச் சிகிச்சையின் போது வெளியிலிருந்து வழங்குவதன் மூலம் சரியான கருவளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையைக் கருப்பையில் உருவாக்க உதவும். இந்த ஹோர்மோன்கள் ஊசிமூலமாக அல்லது குளிசை மூலமாக வழங்கப்படும். இவை ஆரோக்கியமான கரு உட்பதித்தல் மற்றும் கருவளர்ச்சிக்கு இன்றியமையாதவை. எனவே தொடர்ச்சியாகச் சரியான முறையில் மருத்துவரின் பரிந்துரைகளின்படி பயன்படுத்துதல் அவசியமாகும். கருப்பை கரு உட்பதித்தலுக்காகத் தயார் செய்யப்பட்ட பின்னர் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்ட சூழ்நிலைகளில் கருவானது கருப்பையினுள் இடம் மாற்றப்படும். கரு இடம் மாற்றும் செயற்பாடானது IUI போன்று சிறிய குழாயினால் (catheter) கருப்பை வாயிலினூடாக ஸ்கான் வழிகாட்டலுடன் இடம்மாற்றப்படும். கருப்பையினுள் இடமாற்றம் செய்யும் முன்னராக கருவின் வெளிப்புறத்தில் சிறிய துவாரம் ஒன்று லேசர் தொழினுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்டு (hatchign) கரு உட்பதித்தல் செயன்முறை எளிதாக்கப்படும்.

முதிர்வடைந்து கருப்பையினுள் இடம்மாற்றத்திற்குத் தயாரான கருவிலுள்ள மரபணுப் பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான முறைகளும், தொழிநுட்ப வசதிகளும் தற்போது காணப்படுகின்றன. இந்தக்கருவில் இருந்து எடுக்கப்பட்ட சில கலங்களில் உள்ள பரம்பரையலகு மற்றும் மரபணு தொடர்பான நோய்கள் மரபணுவியலாளர்களால் கண்டறியப்படும். குடும்பங்களில் பரம்பரை சம்பந்தமான நோயுள்ள தம்பதியினர், தொடர்ச்சியாகக் கருச்சிதைவு ஏற்படும் தம்பதியினர் மற்றும் வயது கூடிய தம்பதியினருக்கு இம்முறை மிகப் பொருத்தமானதாகும். கரு இடமாற்றம் செய்யப்பட்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு, நீங்கள் உங்கள் வழக்கமான தினசரி செயற்பாடுகளைத் தொடரலாம். கருப்பையில் வைக்கப்பட்ட கருவானது வெளியில் வருவதில்லை, எனவே தொடர்ந்து படுத்திருப்பதோ அல்லது மிகையான ஓய்வு எடுப்பதோ தேவையில்லை. சுடுநீர் குளியலை தவிர்த்து, மருத்துவ நிபுணர் பரிந்துரைத்த அனைத்து மருந்துகளையும் தவறாமல், நேரத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். சீரான மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வது, மலச்சிக்கலைத் தவிர்க்க உதவும். பாரமான பொருட்களை தூக்குதல் மற்றும் கடுமையான உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும். தலைவலி அல்லது தசைப் பிடிப்பு ஏற்பட்டால் 'பரசெட்டமோல்' (Paracetamol) எடுத்துக் கொள்ளலாம். யோனியின் உட்புறத்தை சுத்தம் செய்வது அல்லது கழுவுவது தவிர்க்கப்பட வேண்டும்.

கரு இடமாற்றத்திற்குப் பின்னான காலகட்டம் மன அழுத்தம் நிறைந்ததாக இருக்கலாம் அதனால், லேசான வயிறு வீக்கம், சோர்வு, மார்பக வலி, அல்லது லேசான மாதவிடாய் இரத்தப்போக்கு போன்ற அறிகுறிகள் தோன்றலாம். இவை பொதுவாகச் சாதாரணமானவை. எனினும், கூடுதல் கவலைக்குரிய அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரின் ஆலோசனையை நாட வேண்டும். கரு இடமாற்றத்திற்குப் பின் Beta UCG பரிசோதனை மேற்கொள்ளப்படும். கரு (embryo) உட்செலுத்தப்பட்ட தினத்திலிருந்து 12-14 நாட்களில் பெண்ணின் குருதிப் பரிசோதனை ஊடாக (Serum beta hCG) கர்ப்பம் தரித்துள்ளமை உறுதி செய்யப்படும். முதலாவது குருதிப் பரிசோதனை எடுத்து 48 மணித்தியாலங்களில் இரண்டாவது குருதிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இரு பரிசோதனைகளினதும் அடிப்படையில் கர்ப்பம் தரித்துள்ளமை தீர்மானிக்கப்படும். அதன் முடிவுகளை மருத்துவர் பரிசீலித்து உங்களுக்கு அறிவிப்பார். கர்ப்பம் வெற்றியடையவில்லை என்றால், வழக்கமான மருந்துகள் நிறுத்தப்பட வேண்டும். சில நாட்களில் மாதவிடாய் தொடங்கும். மாதவிடாய் முடிந்த பின் மீண்டும் மருத்துவ நிபுணரை அணுக வேண்டும்.

### கருவை உறைநிலையில் வைத்தல் (Embryo Cryopreservation)

மிகுதியாகக் காணப்படும் கருக்கட்டப்பட்ட கருக்கள், முட்டைகள் விந்துகள் உறைநிலையில் நீண்டகாலம் சேமிக்கப்படுகின்றன. இவை பிற்காலத்தில் மீண்டும் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சை தேவைப்படின் குறைந்த செலவிலும் குறைவான படிநிலைகளுடனும் செய்ய உதவும். திரவநிலை நைதரசன் (Liquid nitrogne) உதவியுடன் உறை வெப்பநிலையில் பொருத்தமான குழ்நிலையில் சரியான தொடர்ச்சியான கண்காணிப்புகள் மூலம் உறைநிலையில் கருக்கள் அல்லது முட்டைகள் அல்லது விந்துகள் பாதுகாக்கப்படும்.

உறைநிலையில் பேணப்படும் கருக்களில் தொற்றுநோய்ப் பரிமாற்றங்களோ அல்லது பிறப்புக் குறைபாடுகளோ அல்லது மரபணுக் குறைபாடுகளோ ஏற்படுவதாக விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப் படவில்லை. இவை ஒப்பீட்டளவில் பாதுகாப்பான செயற்பாடுகளாகவே காணப்படுகின்றன

### கருவைச் சோதித்தல் (Embryo biopsy)


IVF சிகிச்சையின் போது, கரு வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் (சாதாரணமாக 5வது அல்லது 6வது நாள்) கருவில் இருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயிரணு எடுத்து அவற்றை மரபணு பரிசோதனை செய்யப்படும். இதன் மூலம் மரபணுக் குறைபாடுகள் உள்ள கருவைத் தவிர்த்து, ஆரோக்கியமான கருவைத் தேர்வு செய்ய முடியும். இது கரு இடமாற்ற வெற்றிச் சாத்தியங்களை அதிகரித்து, மரபணு நோய்களைத் தடுப்பதில் உதவுகிறது.

செயற்கைக் கருக்கட்டல் (IVF) சிகிச்சை என்பது நுணுக்கமான மருத்துவச் செயல்முறை ஆகும், இதில் பல கட்டங்கள் அடங்கும். இந்த கட்டங்கள் அனைத்தும் சீரான மருத்துவக் கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படும்போது, சிகிச்சையின் வெற்றிச் சாத்தியம் அதிகரிக்கிறது. சிகிச்சைக்குப் பின்பும், உடல் பராமரிப்பு மற்றும் மருத்துவ ஆலோசனைகளைச் சரியாகப் பின்பற்றுதல், சிக்கல்களைத் தவிர்க்கவும், மன அமைதியுடன் சிகிச்சையைத் தொடரவும் உதவுகிறது. எனவே, IVF சிகிச்சை பெறும் நபர்கள் மருத்துவர்களின் வழிகாட்டலைக் கவனமாகவும், முறையாகவும் பின்பற்றுவது மிகவும் முக்கியமாகும்.

(அடுத்த வாரமும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையை வெறுக்கவைக்கும் 'வதைத்' அச்சம்!



ஏகலைவன்

எந்த வகையான தீங்கிலிருந்தும் பாதுகாக்கப்படுவதற்கான பிள்ளைகளின் உரிமையை மீறுவதும் வன்முறையே என வலியுறுத்துகிறது ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்(UNICEF). அந்தவகையில் உலகளாவிய ரீதியில் குறிப்பாக பதின்மவயது மாணவர்கள் எதிர்நோக்கும் வன்முறையில் 'புல்லியிங்'(BULLYING) முக்கியமானதாக உள்ளது. தமிழில், 'வதைத்தல்', என மொழிமாற்றலாம். ஒருவர் தன்னை விட ஏதோ ஒருவகையில் பலவீனமானவரை உடல்ரீதியாகவோ மனதளவிலோ துன்புறுத்துவதை வதைத்தல் எனக் கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்(UNICEF) வதைத்தல் குறித்து இலங்கையில் நடத்திய ஆய்வின் அறிக்கையில் 'சகாக்களிடையிலான வதைத்தல் என்பது காலப்போக்கில் மீண்டும் மீண்டும் நிகழும் முரட்டுத்தனமான நடத்தையைக் கொண்டிருக்கும். அத்துடன் வதைப்பவருக்கும் அதனால் பாதிக்கப்படுபவருக்கும் இடையில் சக்திச்சமநிலை இல்லாதிருக்கும்.. இது பிள்ளைகளுக்கு நீண்டகால, குறுகிய கால பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும். மாணவர்களின் குடும்பப் பொருளாதார நிலையுடன் வதைத்தல் சம்பந்தப்படுவதில்லை. பாடசாலை மட்டத்தில் மதிப்பெண்கள் குறைதல், பாடசாலை செல்வதில் வெறுப்பு, மது, போதைப்பொருள் பாவனை ஆரோக்கியப் பாதிப்பு உள்ளிட்ட ஆபத்தான நடத்தைகளோடு வதைத்தல் தொடர்புபடுகிறது'என்று குறிப்பிட்டுள்ளது. இலங்கைப் பாடசாலைகளில் சராசரியாக 68வீதமான மாணவர்களும் 51வீதமான மாணவிகளும் வதைத்தலால் பாதிக்கப்படுகின்றனர் என ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

நிலைமை மோசமாக இருந்தாலும் பெற்றோர், ஆசிரியர், மூத்தவர்கள் ஆகியோர் வதைத்தலின் தீவிரத்தன்மை குறித்து போதியளவு அக்கறைகாட்டவில்லை, புரிந்துகொள்ளவில்லை என்பதையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதனைக் கையாளும் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாகப் புறக்கணித்து விடுவதாகவும் யுனிசெப் ஆய்வறிக்கை கவலை தெரிவிக்கிறது.

இந்நிலையில்தான் பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்கால நன்மைகருதி வதைத்தல் பற்றிய விழிப்புணர்வு பெறுவது அவசியமாகிறது.

பதின்மவயது 13 வயது தொடக்கம் 19வயது வரையான மாணவர்கள் உடலிலும் மனரீதியாகவும் மாற்றங்களை எதிர்கொள்கிறார்கள். இதனால் அவர்கள் நடத்தையிலும் உணர்வுகளிலும் குழப்பமடைகிறார்கள். இந்நிலையில் அவர்கள் வதைத்தலை எதிர்கொள்வதற்கும் கையாள்வதற்கும் பெற்றோரின் அக்கறையும் கவனிப்பும் தேவைப்படுகிறது.

### பிரச்சினையும் வதைத்தலும்

தன்னைத் தற்காத்துக்கொள்ளச் சிரமப்படும் ஒரு மாணவருக்கு எதிராக அவரைவிட வலிமையான அல்லது அதிகசக்தி கொண்ட சக மாணவர் அல்லது மாணவர் குழுவினரால் தீங்கு இழைக்கப்படுவதை வதைத்தல் எனலாம்.

பாடசாலைகளில் நடக்கும் வதைத்தல் பாதிப்புகளால் மாணவரிடையே பிரச்சினை வருவதும் அவர்களே தீர்க்கும் வழிகளைக் கண்டுபிடிப்பதும் ஆரோக்கியம்தானே என்று கருதிக் கடந்து விடுகிறோம். இது தவறாகும். பதின்மவயது மாணவரிடையே பிரச்சினை என்பதும் வதைத்தல் என்பதும் ஒன்றுதானா? இல்லை என்கிறார். வதைத்தல் பற்றிய ஆய்வுகளின் முன்னோடியான சுவீடிய உளவியலாளர் டான் ஒல்வேயஸ்.

மாணவரிடையே கருத்து மாறுபாடு, இணக்கமில்லாமை, ஒரே விடயத்தில் வெவ்வேறு அல்லது வித்தியாசமான பார்வைகள் போன்றவை நிலவுவது சாதாரணமானதே. இதனைப் பிரச்சினை எனலாம். இது வதைத்தல் என அர்த்தமாவதில்லை. பிறருக்கு மாறுபட்ட கருத்துகள் இருக்கலாம் என்பதை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே உணரத் தொடங்குவார்கள். அவர்கள் இதனை முழுமையாகக் கற்றுணரக் காலம் எடுக்கும். பிரச்சினைகளின்போது தத்தமது கருத்தை முன்வைக்க எவரும் தயங்குவதில்லை. ஏனெனில் அப்போது அவர்கள் அனைவரும் சமமானவர்களாக இருப்பார்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒருவர் பிரச்சினையை எப்படிக் கையாள்கிறார் என்பதே தீர்வை சுமுகமாகவோ அல்லது விரும்பத்தகாததாகவோ உருவாக்கும். ஒருவர் மற்றவரை முரட்டுத்தனமாகக் கையாண்டு மனம் புண்படும்படி வார்த்தைகளைப் பயன்படுத்தினால் பிரச்சினை மோசமான நிலையை அடையும். மாணவர்களிடையே ஒரு மாணவன் வயதில் மூத்தவராக,, அதிக நண்பர்களைக் கொண்டவராக, உடற்பலம்மிக்கவராக அல்லது இத்தகைய வேறு காரணங்களால் சக்தி கூடியவராக இருந்தால் மற்றவர்களுடன் அதிகாரசமமின்மை ஏற்படும். சம்பந்தப்பட்டவர்களிடையே அதிகார சமமின்மை இருந்தால் மோசமானநிலை மீண்டும் மீண்டும் நடக்கும்போது பிரச்சினை வதைத்தலாக மாறிவிடுகிறது. நாளடைவில் அந்த மாணவர் தனது முரட்டுத்தனமான நடத்தையைத் தொடரும்போது வதைத்தல் விபரீதநிலையை அடைகிறது. வதைத்தலால் பாதிக்கப்படுபவர் தன்னை அதிகாரமற்றவராகவும் கருத்துகளை வெளிப்படுத்த இயலாதவராகவும் எண்ணுவார். பாடசாலைக்குள் மட்டுமின்றி பிரத்தியேக வகுப்புகள், மைதானம் போன்ற இடங்களிலும் வதைத்தல் தொடரும்போது பாதிப்பு மிகமோசமாகிறது.

### அடிப்படைத் தன்மைகள்

வதைத்தல் மூன்று அடிப்படைத் தன்மைகளைக் கொண்டிருக்கும் என ஆய்வுகளில் அறியவந்துள்ளது



* ஒரு மாணவன்மீதான வதைத்தல் மீண்டும் மீண்டும் தொடர்ந்து நடக்கும்.
* இது தற்செயலாக நடப்பதாக இருக்காது. கஷ்டத்தை ஏற்படுத்தும் நோக்கில் வேண்டுமென்றே செய்யப்படுவதாக இருக்கும்.
* வதைத்தலின்போது பாதிக்கப்படுபவர் தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள சிரமப்படும் அல்லது பலவீனமானநிலையில் இருப்பார்.

வதைத்தல் பலவிதங்களில் நடக்கலாம்.

அவையாவன:-

**உடல்ரீதியாக;** தள்ளுதல், அடித்தல், பொருள்களை அபகரித்தல் அல்லது சேதப்படுத்தல்.

**வார்த்தை ரீதியாக;** அவமானகரமான பெயர்சூட்டல், பாலியல் ரீதியான, துவேசமான வார்த்தைகளைப் பயன்படுத்தல், கேலி கிண்டல் செய்தல்.

**சமூக ரீதியாக;** சேர்ந்தியங்கும் குழுவிலிருந்து ஒருவரை ஒதுக்குதல், அவரைப் பற்றி பொய்க்கதை அல்லது வதந்தி பரப்புதல்.

**எழுத்து ரீதியாக;** ஒருவரைப் புண்படுத்த குழப்ப அச்சுறுத்த அவமதிக்க குறிப்புகளை எழுதுதல் அல்லது வரைதல்

**மின்னணு ரீதியாக;** இலத்திரனியல் தொலைத்தொடர்பாடல் மூலம் ஒருவரை சிறுமைப்படுத்த, கேடு விளைவிக்க புகைப்படம், வீடியோ போன்றவற்றைப் பயன்படுத்தி நற்பெயரைக் கெடுப்பது

பதின்மவயதில் உடல், உள மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால் அவர்களின் நடத்தையிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்களை அவர்களின் வளர்ச்சியின் பகுதியாகக் கருதுகிறோம். வதைத்தலையும் அத்தகைய வளர்ச்சியின் பகுதியாகக் கருதி கவனிக்காது விடுவதே ஆபத்தாகிவிடுகிறது. வதைத்தலுடன் தொடர்புபடும் மாணவர்கள், குடும்பங்கள், அவர்களைச் சுற்றியுள்ள சமூகம் ஆகியவற்றுக்கு வதைத்தலின் விளைவு மிக மோசமானதாக அமைந்துவிடுகின்றது என்பதையே ஆய்வுகளும் அனுபவங்களும் தொடர்ந்து காட்டுகின்றன. ஆகவேதான் வதைத்தல் ஒருபோதும் ஏற்கமுடியாததாகிறது.


### பால் வேறுபாடு

பிள்ளைகளில் இருபாலருமே வதைப்பவர்களாகவோ அல்லது வதைபடுபவர்களாகவோ இருக்கலாம். ஆண் பிள்ளைகள் அதிகம் உடல்ரீதியாகவும் வெளிப்படையாகவும் வதைக்கலாம். பெண்பிள்ளைகள் பெரும்பாலும் மறைமுக வழிகளையே கையாள்வார்கள். சகமாணவியைப் பற்றி வம்பு கதைப்பது, குழுக்களில் இருந்தோ நிகழ்வுகளில் இருந்தோ ஒதுக்குவது, தனிமைப்படுத்துவது போன்ற வழிகளைப் பெண்பிள்ளைகள் அதிகம் பயன்படுத்தக்கூடும். வதைத்தல் என்ற வார்த்தையைப் பதின்மவயதுப் பிள்ளையொன்று அறியாமல் இருக்கலாம். ஆனால் தொந்தரவு, வெருட்டல் போன்ற வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடும். தன்னுடன் மற்றொருவர் கடுமையாக நடப்பதை அல்லது தன்னைத் துன்புறுத்துவதை அல்லது அச்சமடையச் செய்வதை உணர நிச்சயமாக முடியும். அதேவேளை பெற்றோரிடம் அதனைக் கூறாமலிருக்கலாம். தனக்கு நேர்வதைக் கூறுவதால் 'போட்டுக் கொடுப்பதால் (கோள் சொல்வது) அல்லது நட்புக்குத் துரோகம் செய்வதால் நிலைமையைத்தான் மேலும் மோசமடையச் செய்யலாம் என்ற எண்ணமாக இருக்கலாம்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவி




நீண்ட பிரிவின் வலி
தாய் நாட்டுக்கு
என்னை அழைத்திருக்கிறது
தாயும் தாய்நாடும் வேண்டாம் என
முப்பது வருடங்களுக்கு முன்
போனவள்
மீண்டும் வந்திருக்கிறேன்
அம்மாவின் இறுதி நாட்களைக் கழிக்க
என்னை புலம்பெயர் தேசம்
வழியனுப்பியிருக்கிறது!

இருபது வயதுக் காதலை
பெற்றோரின் வற்புறுத்தலுக்காக
தூக்கி எறிந்துவிட்டு
காட்டியவனை மணந்து
சந்ததி பெருக்கி
சாதாரணமானவளாக
வாழ்ந்த வெட்கம் மனதுக்குள்
தகித்துக்கொண்டிருந்தது...

துப்பாக்கியின் புன்னகையோடு
விடுதலை கேட்ட நிலவன்
அண்ணனுக்கு நண்பனாகி
எனக்கு காதலனாகிய வரலாறு
கால நீரால் கரைந்து
அடையாளம் இல்லாமல்
எங்கோ தொலைந்து போனது!

அறியாத வயதில்
அறிந்து செய்யும் பாவம்
'தண்டிக்கும்' என நிலவனின் அம்மா
கண்ணீர் விட்ட காலங்களை
மறக்க முடியவில்லை.
பிழைகளை மன்னித்தருளக்கேட்டு
மீண்டும் வந்திருக்கிறேன்..
கொடிய போர் நடத்திய
காய் நகர்வுகளில்
எல்லாம் மாறிப்போயிருக்க
மூளையில் மறுகரையில்
ஒளிந்திருக்கும் கடந்த காலத்துக்காக
ஏதோ ஒன்றைச் செய்ய
காலம் திரும்ப என்னை
இங்கு கொண்டு வந்திருக்கிறது!

அம்மாவின் ஆரோக்கியத்தைக் கவனித்து
நிலவனைத்தேட முயற்சிக்கிறேன்!
அவன் வீட்டைத்தேடி நடக்கிறேன்.
மனதால் நேசித்து ..
உயிருடன் கலந்ததாக கண்களால் பேசி
நீ இல்லையென்றால் எதுவுமில்லை என
கனவுகளில் மட்டும் நெருங்கி
கட்டுப்பாடுகளுக்கு உடன் பட்டுக்
காதல் செய்தோம்
அந்த நினைவுகளின் பயணம்
நெருஞ்சிமுள்ளாக
என் மூளை முழுவதையும்
கிழித்துத்து துவாரங்களை
குடைந்திருக்கிறது.
இருந்துவிட்டு வந்துபோகும்
நினைவென்றில்லாமல்
நித்தமும் கனவுகளில்
தொலைத்த கண்ணீரின்
பயணங்களை அநுபவித்தவள் மட்டுமே
உணர்ந்துகொள்ள முடியும்
அதன் வலிகளை!

சிறுவயது ஞாபகங்கள் காலத்துக்கும்
அழியாத பதிவுகளோடு மன அடுப்பில்
வெந்து வெப்பநீரை வெளித்தள்ளுகிறது
அக்காவையும், அண்ணனையும்
மாவீரராகப் பார்த்த என் தாய்
என்னை இழக்கத் தயாரில்லை
உயிரைக்கொடுத்தேனும்
எனது வாழ்வை அமைத்துவிடப் போராடி
வென்றாள்..
நானும் என் காதலும்
இறுதியில் தோற்றோம்!

நிலவனின் படலை திறந்திருக்கிறது
அதே வறுமையும் , வெறுமையும் சேர்ந்த
காலம் மாற்ற முயற்சிக்காத படலை
கண்ணீரையும் கவிதையையும் எழுதி எழுதி
அழித்து துருவேறிக்கிடக்கும்
திறந்த வாயில்
சுற்றமெல்லாம் மாறி
சுவாசிக்க முடியாமல் நிற்கிறது
மேலெழுந்து கீழே பார்க்கின்ற
பிரமாண்டமான கட்டடங்களுக்கு அருகில்
கவனிக்கப்படாத ஏழையின் குடிசையாக..

படலையை தள்ளிக்கொண்டு
மூலஸ்தான விக்கிரகத்தை தேடுகிறேன்
கயிற்றுக்கட்டிலில் சாய்ந்திருக்கும்
நிலவனின் தாய்
கைகளைபிடித்தபடி மடியில்
சாய்ந்திருக்கும் சிறுபிள்ளை...
நெருங்கிப்போகிறேன்...
என்னை அடையாளப்படுத்த
கடினப்பட்டு கண்டுகொண்டதும்
சூல் வெடித்துப்பெருகும் இரத்தமாக
அவள் கண்ணீர்
கத்திக்கத்தி ஓலமிட்டது..
நான் பகையாளியாக இருப்பினும்
பழைய நினைவுகள் மறுகிக்கொண்டு
மனதில் இருந்து
ஓங்காளித்துக் கொட்டத் தொடங்கின
அவள் வெறுப்புகள்!

போர் முடிந்து
வாழத் தொடங்கிய நிலவனை
அழைத்துப்போயிருக்கிறார்கள்..
போராளி மனைவியையும் சேர்த்து...
கைக்குழந்தை பேத்தியிடம்
கைமாறியிருக்கிறது..
பதினைந்து வருடங்கள் கடந்தன
காலம் அவனைத்
திருப்பிக் கொடுக்கவில்லை
மகள் பதின்ம வயதில் இருக்கிறாள்
இரண்டு ஏழ்மையும்
அவர்களுக்காக காத்திருக்கின்றன..

எங்காவது நன்றாக வாழ்கிறான்
என்ற நம்பிக்கை கொண்ட மனம்
நடுங்கிப்போனது
நிலவனின் அம்மாவின் அழுகை
கேட்கக் கேட்க அதில்
எனது தவறும் சேர்ந்ததாக
உள்ளம் வலியெடுக்க ஆரம்பித்தது...
தாய் தந்தையின் முகமே பார்க்காமல்
இந்தப்பிள்ளை வளர்ந்து நிற்கிறது..
இந்த வயோதிபப் பெண்

எத்தனை வலி நிறைந்த மனதோடு
வாழ்ந்துகொண்டிருக்கிறாள்?

முதற் காதல் தோற்க
போரை மட்டும் நேசித்து
என் நினைவுகளை மறக்க
உயிரை வெறுத்துக் களம் நின்றவன்
தனக்கான வாழ்வைத்தேடி கூடு கட்டி
பெண்குஞ்சொன்றை
பிரசவித்த காலத்திலேயே
காணாத தேசமெங்கோ
கடத்தப்பட்டான்.

மன்னித்துவிட்டு..விடுதலை என்று
மீண்டும் விசாரணை என
மறந்தவர்களை வாழத்தடுக்கும்
கொடிய போரின் முடிவில்லா ஆர்ப்பரிப்பு
இது நீண்டுகொண்டே போகுமா?
நிலவன் என்ன பாவம் செய்தான்?
நீண்ட நெருப்பு புகை மண்டலமாக
எரிந்து சாம்பலாக
ஒரு வாழ்க்கையை தொலைத்து
என் நினைவுகளைக் காவிக்கொண்டு

அலைந்து
மீண்டு வந்து தன் வாழ்வைப் புதுப்பிக்க
எண்ணியவன்
எச்சத்தை விட்டு விட்டு
காணாத இடம் எங்கோ
சிறைவாசம் செய்யப்பட்டானோ?
மண்ணுக்குள் உயிரோடு
ஒன்றாய் புதைத்தனரோ?

பசிக்கும், அடிப்படைத் தேவைகளுக்குமே
அங்கலாய்க்கும்
ஓர் ஏழைக்குழந்தையின் அழுகை
இந்தப்பூமி முழுவதும் பரவி
பலர் கழுத்துக்களுக்கு
மரணக்கயிறாகட்டும்!
பாவம் செய்தவர்கள் எல்லாம்
தப்பித்துவிட ....
பசிக்காக ஏங்கும் சிசுவுக்காக
இரண்டாம் தலைமுறைக்காக
தவம் இருக்கும் முதுமை....
பராமரிக்கப்படவேண்டியவை
பாடுபடுகின்றன...
எதுவுமே தெரிந்தோ தெரியாமலோ
மண்ணின் கீழோ
அடங்காத ஆத்மாவோடு அங்கலாய்க்கும்
எலும்புக்கூடுகளாகவோ?....

இந்த ஆத்மாக்கள் பேசுமென்றால்
வேதனைகளைக்குறைத்து

அருவங்களோடு வாழ்ந்து
மனஅமைதி
பெற்றுக்கொள்ளலாம்
நிலவன் அழிந்து போனானா?
அருவமாக எங்கேனும் அலைந்து
என்னிடம் வந்து என் மூளைக்குள்
புகுந்து ..
தன் பிள்ளைக்கு உதவ
என்னை அழைத்தானா?
எத்தனை வருடங்கள் கடந்தாலும்
என்னை மறக்காது என்பெயரை
தன் பிள்ளைக்கு வைத்து
காலம் முழுவதும்
என்னை அழைப்பதாய்...
கனவு கண்ட நிலவன்
இல்லாமலே போனானா?

இந்த வாழ்வு எத்தனை வலிகளை
வடிவங்களாய்த் தருகிறது...
என் வாழ்வுக்கான பொறுப்புக்கூற
நிலவன் என்னை அழைத்தான்
என்பது தான் நிஜம்
இலங்கைக்கு வரமாட்டேன்
என்றவள் கலையாடி
கைகாட்டியதாய்
நிலவனைத் தேடியதேன்?
அவனுடைய ஆத்மா தாயையும்
மகளையும் காப்பாற்ற என்னை
இங்கு கொண்டு வந்திருக்கிறது.

இன்றிலிருந்து என் வாழ்வு
மாறுகிறது
என்பிள்ளைகளோடு சேர்த்து
நான்கு பிள்ளைகளுக்கு
தாயாகிறேன்
நிலவனின் தாய்க்கும் மகளாகிறேன்!
அவனுடைய படங்களைத்
தேடுகிறேன்
அவன் வரைந்த ஓவியங்களைப்
பார்க்கிறேன்
என்னைச்சுற்றி அவன் மூச்சுப்
படர்வதை
உணர்கிறேன்..
உருவமில்லா ஆத்மா
ஆனந்தப்படுகிறது
என் அருகில் வந்து அழுகிறது
தேம்பியழும் தாயின் கண்ணீரைத்
துடைக்கிறது
மகளை முத்தமிடுகிறது....
தன் தாயையும் , மகளையும்
என்னிடம் தந்துவிட்டமகிழ்வில்
மெதுவாகப் புன்னகைக்கிறது!

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

அண்டைக்கு நான் பிடிச்சுவைச்ச பிள்ளையார் போலைக் கம்மாலைக்குள்ள குந்தியிருந்தாப்பிறகு நாகராசனுக்கும் வேறவழியில்லாமல் ஒரு மாதிரி உலக்கைக்குப் பூண்போட்டுத் தந்திட்டார். கூலியும் கொஞ்சம் கூட எடுத்திட்டார். இதைத்தான் கந்தப்புப் பெரியப்பாவும் சொன்னார். "கூலியுங் கொஞ்சங் கூடித்தான் போச்சு. எண்டாலும் உலக்கை திரும்பக் கிடைச்சதே பெரிய காரியம்!" அதுகும் மெய்தான் உலக்கை திரும்பி வந்ததே எனக்கொரு பெருஞ்சாதனைதான்.

இந்த நாகராசனிட்ட எங்கட மன்னவனும் ஒரு கத்தியைக் கொண்டுபோய்த் தெரியாத்தனமாத் தோய்விக்கக் குடுத்திருக்கிறார். பிறகென்ன ஆட்டம் ஆரம்பம்! எனக்கு நடந்ததைப்போலதான் மன்னவனுக்கும் நடந்தது. நாகராசனும் மன்னவனை 'இண்டைக்கு வா! நாளைக்கு வா! நாளைமறுநாள் வா!'எண்டு பேய்க் காட்டத்தொடங்கிட்டார். அந்த மூட்டம் ஒரு நாள் நானும் அம்மாவும் பின்னேரக் கையாய்க் கணேசு மாமா வீட்டை போயிருந்தம்.

நான் கணேசு மாமாவைப் பற்றி ஊர்ப்புதினத்தில் விலாவாரியா எழுதியிருக்கிறன். எண்டாலும் ஒரு சின்ன அறிமுகத்தைத்தாறன். கணேசு மாமாவைத் "தெடுத்தனைக் கணேசு" எண்டால் எல்லாருக்கும் தெரியும். தவில் மேதை தட்சணாமூர்த்தியின்ர மகன் உதயசங்கரை வளர்த்ததும் இவர்தான். இவர் பிற்காலத்தில நாகராசன் வீட்டுக்குக் கிட்டை ஒரு வீடு வாங்கி அங்கைதானிருந்தவர். அந்த வீட்டைதான் நானும் அம்மாவும் அண்டைக்குப் பின்னேரம் போனனாங்கள்.

47

நாங்கள் அங்கை போய்க் கதைச்சுக்கொண்டிருக்கேக்குள்ளை மன்னவனும் தன்ரை லேடீஸ் சைக்கிளை வெளியில விட்டுட்டு உள்ளை வந்து அம்மாவுக்குப் பக்கத்திலயிருந்த கதிரையில இருந்தார். ஆளின்ரை முகம் கொஞ்சம் வாட்டமாயிருந்திச்சுது. 'என்னம்மான் எங்கை போகிட்டுக் களைச்சு விழுந்து வாறியள்? முகமும் கொஞ்சம் வாட்டமாக் கிடக்குது என்ன சங்கதி?' எண்டு அம்மா அவரைப் பாத்துக்கேட்டா. அதுக்கு அவர், "அதையேனடி பிள்ளை கேக்கிறாய்? வெளியில சொல்ல வெக்கமாயிருக்குது!" எண்டொரு பீடிகை போட்டார்.

அம்மாவும் விடேல்ல. "பரவாயில்லை என்ன சங்கதி எண்டு சொல்லுங்கோவன்" எண்டு விடுப்புப் புடுங்கினா. அதுக்கு அவர் இரகசியம் சொல்லுமாப்போலை குனிஞ்சு மெல்லமாச் சொன்னார். "உவள் பத்தினி(மன்னவனின் மனைவியின் பெயர் பத்தினி) சாமத்தியப்படுறதுக்கு முந்தி ஒரு கத்தியைக் கொண்டுபோய் ஒருத்தனிட்டத் தோய்விக்கக் குடுத்தனான். இண்டைக்கு அதுக்குத்தான் போகிட்டு வாறன். இன்னும் கத்தி கிடைச்சபாடில்லை"

"இதென்ன கோதாரி? ஆரிட்டைக் குடுத்தனீங்கள் அம்மான்?" அம்மாவும் புதினமறிய நோண்டினா.

"வேற ஆரிட்டை? உந்த நாசமறுத்த நாகராசனிட்டத்தான்" எண்டு மன்னவன் சிரிக்காமல் சொன்னார்.

(தொடரும்)

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# பாடசாலையை வெறுக்கவைக்கும்...




அத்துடன் பதின்மவயதினர் விடயங்களைத் தாமே கையாள விரும்புவர். பெற்றோரிடம் சொல்வதால் தமது சுதந்திரம் மட்டுப்படுத்தப்படலாம் அல்லது கட்டுப்பாடு விதிக்கப்படலாம் என்பதாக இருக்கலாம். கோள்மூட்டுதலுக்கும் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கும் இடையிலான வேறுபாட்டை பிள்ளைகளுக்கு பெற்றோரும் ஆசிரியர்களும் புரியவைக்க வேண்டியது அவசியம். ஒருவரைச் சிக்கலில் மாட்டி விட அவரைப்பற்றி பிறரிடம் சொல்வது கோள்மூட்டுதலாகும். ஒருவர் அல்லது அவருக்குத் தெரிந்த ஒருவர் கஷ்டப்படும்போது வேதனைப்படும்போது அல்லது பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை பறிக்கப்படும்போது உதவி பெறுவதற்காக பிறருடன் பிரச்சினையைக் கதைப்பது உதவி கோருவதாகும்.

இந்த வேறுபாட்டை பிள்ளைகளுக்கு பெற்றோரும் ஆசிரியர்களும் தெளிவுபடுத்தவேண்டும்.

தமது பிள்ளை சொல்லாவிட்டாலும் பாடசாலையில் அவனோ அவளோ வதைபடுவதை பெற்றோர் அறிவதற்குச் சில அறிகுறிகளை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வதைபடும் பிள்ளைகள் பாடசாலை செல்ல விரும்பாதிருக்கலாம் அல்லது பாடசாலைக்குப் புறப்படும் நேரங்களில் அழலாம் அல்லது சுகவீனமடையலாம். சக மாணவர்களுடனான செயற்பாடுகள், நிகழ்வுகள் போன்றவற்றில் பங்கேற்பதைத் தவிர்க்கலாம்.



அவர்களுடைய நடத்தை அசாதாரணமாக மாறலாம். பாடசாலைக்கு எடுத்துச்செல்லும் கற்றல் உபகரணங்கள், பணம் போன்ற சொந்தப் பொருள்களைத் தொலைத்து விட்டு அல்லது கிழிந்த ஆடையுடன் வீட்டுக்குத் திரும்பலாம். அதற்குப் பொருந்தாத விளக்கங்களை சொல்லலாம்.

வதைத்தலுக்கு உள்ளாகும் பதின்மவயதினர் பாடசாலையை விட்டு விலகுவது பற்றிக் கதைக்கக்கூடும்.

## என்ன செய்வது?

தமது பிள்ளை வதைபடுவதாக உணரும் பெற்றோர் முதலில் உங்கள் பிள்ளை உங்களுடன் கதைப்பதை ஊக்குவியுங்கள். அந்தப் பிள்ளைக்கு மற்றவர்களைப்போல் பாதுகாப்பாக இருக்கும் உரிமை உண்டென்று நம்பிக்கை ஊட்டுங்கள்.

பாடசாலையில் நடந்தவற்றை தெளிவாகவும் சரியாகவும் அறிந்து குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

கோள்மூட்டுதலுக்கும் தெரியப்படுத்துவதற்கும் இடையிலான வேறுபாட்டை பிள்ளை தெரிந்து கொள்ள உதவுங்கள். அறியப்படுத்தத் துணிவு தேவை என்றும் அறியப்படுத்துவது இன்னொரு மாணவருக்குப் பிரச்சினை உண்டாக்க அல்ல, எல்லா மாணவர்களையும் பாதுகாக்கவே என்றும் உணரவையுங்கள். உங்கள் பிள்ளையினுடைய வகுப்பாசிரியர் அல்லது நம்பிக்கைக்குரிய மற்றொரு ஆசிரியரை அல்லது பகுதித்தலைவரை அல்லது உப அதிபர் அல்லது அதிபரைச் சந்தித்துக் கதையுங்கள். பிள்ளை பிள்ளையின் நடத்தையைக் கவனியுங்கள்,

அப்போதும் வதை நிற்காவிட்டால் மீண்டும் அதிபருடன் உரையாடி வதைத்தலை நிறுத்த மேற்கொண்ட படிநிலைகளை உறுதிப்படுத்துங்கள்.

பாடசாலை நேரத்தின் பின் பிரத்தியேக வகுப்பு அல்லது மைதானத்தில் வதைத்தல் நடக்குமாயின் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுடன் கதையுங்கள். பாலியல் வன்முறை, ஆயுதப்பாவிப்பு அல்லது பிள்ளையின் பாதுகாப்பு சமூகத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகுமாயின் பொலிஸாரிடம் முறையிடுங்கள்.

## என் பிள்ளை....?

எந்தப் பெற்றோருக்கும் தமது பிள்ளை பிறரை வதைப்பதை நம்புவது கடினம். ஆனால் யதார்த்தத்தில் அதற்குச் சாத்தியம் உண்டெண்பதை ஏற்கத்தான் வேண்டும். பாடசாலையில் வதைத்தலில் ஈடுபடும் பிள்ளை வீட்டிலும் அவ்வாறு நடப்பார்கள். உங்கள் பிள்ளை தனது சகோதரருடன் முரட்டுத்தனமாக நடக்கும் அறிகுறி தென்படுகிறதா எனக் கவனியுங்கள்.

வதைத்தலில் ஈடுபடும் பிள்ளை முரட்டுத்தனமாகவும் குழப்பம் செய்பவர்களாகவும் இருப்பார்கள். வீட்டு ஒழுங்குகளை மதிக்காமல் இருப்பர். வீட்டுக்கு வரும் நண்பர்களுடன் விடாப்பிடியாக அனுதாபமின்றி நடக்கலாம்.

உடல்ரீதியாக வதைத்தலில் ஈடுபடும் பிள்ளை சிராய்ப்புகள், காயங்கள், கிழிந்த உடைகளுடன் வீட்டுக்கு வரலாம். உங்கள் பிள்ளையிடம் திடீரென்று வழக்கத்தைவிட அதிகமாகப் பணமோ, பிறருடைய பொருள்களோ காணப்படலாம். பதின்மவயதினரின் வாழ்வில் ஏற்படும் பெரியமாற்றம், குழப்பம் அல்லது இழப்பின் விளைவாக வதைத்தலில் ஈடுபடும் நடத்தை தோன்றலாம். உங்கள் பிள்ளைக்கு இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டதா என ஆராயுங்கள். உங்கள் வீட்டில் ஒரு பிரச்சினை எப்படிக் கையாளப்படுகிறது என்று சிந்தியுங்கள். வீட்டில் விடயங்களை நேர்மறையாகக் கதைத்துத் தீர்ப்பதன் மூலம் வன்முறையோ ஆத்திரமோ இல்லாமல் பிரச்சினைகளைச் சமாளிக்க பிள்ளைகளுக்கு முன்னுதாரண மாக இருங்கள்.

'வதைத்தல் என்றால் என்ன? எனப் பிள்ளைகளுக்கு பெற்றோர் புரிய வைப்பது முக்கியமானது. வதைத்தல் அடுத்தவரை வேதனைப்படுத்துவது மற்றும் அதன் விளைவுகள் விபரீதமானவை என்பதைச் சொல்லுங்கள். வதைத்தலைத் தவிர்ப்பதும் தலையிடுவதும் அதனை ஒழிப்பது மட்டுமன்றி நல்லுறவுகளை மேம்படுத்துவது பற்றியதுமாகும். ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பெரியவர்கள் நல்லுறவு என்றால் என்ன ? என்று தங்கள் வாழ்க்கையின் மூலம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறார்கள். அதனைப் பார்த்துப் பிள்ளைகள் பெரியவர்களுடன் நல்லுறவைப் பேணுவதுடன் மற்றைய பிள்ளைகளுடனும் சுமுகமான நல்ல உறவையும் நட்பையும் பேண வைக்கிறது. நல்ல உறவுகளைப் பேணும் மாணவர்கள் மற்றையவருக்கு உதவி அளிப்பதுடன் கல்வி சார்ந்த இலட்சியங்களை மேம்பட்டமுறையில் எட்டுகிறார்கள். பாதுகாப்பானதும் அனைவரையும் மதித்து ஏற்றுக்கொள்வதுமான பாடசாலைச் சூழலை உருவாக்குவதில் வதைத்தலைத் தவிர்ப்பது முக்கியமான பங்கு வகிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)



# அந்தோன் சேகவின் மூன்று ஆண்டுகள்

## மனம் பொருந்தா மணமக்களின் மனப்போராட்டம்



நா.நவராஜ்

லாப்தேவ் பெரிதாகக் கத்தித் தனது மனதில் உள்ளதையெல்லாம் கொட்டத்தொடங்கினான். பணத்திற்காக நீ என்னை மணந்தாய் எனக் குற்றம் சுமத்துகின்றான்.

யூலியா கடவுள்மேல் ஆணையிட்டு 'நான் பணத்திற்காக அல்ல, உன்னை நான் மறுத்திருந்தால் தவறு புரிந்திருப்பேன் என நினைத்தேன், உன்வாழ்க்கையையும் என் வாழ்க்கையையும் பாழ்படுத்தி விடுவேனோ என அஞ்சினேன், அதனால் சம்மதித்தேன்' என்கிறாள். பணத்திற்காகவும் அல்ல காதலுக்காகவும் அல்ல வெறும் அனுதாபத்திற்காக பயத்திற்காகவே இந்தத் திருமணம் நடந்தது போலும். லாப்தேவ் அவள் காலில் வீழ்ந்து முத்தமிடுகின்றான். அவள் தனது தகப்பனார் வீடு செல்ல முடிவெடுக்கிறாள். அவள் எழுந்து தடுமாறி நடந்து செல்கின்ற போது லாப்தேவ் நினைக்கிறான் தான் முத்தமிட்ட காலைச் சரியாக ஊன்ற விரும்பாமல் நடக்கின்றாள் என்று. தகப்பனார் வீட்டுக்குச் செல்லும் யூலியா நண்பர்கள் போடும் கடிதத்தால் அங்கிருந்து வருகின்றாள். ஒரு குழந்தைக்குத் தாயாகின்றாள். அதுவும் தொண்டை அடைப்பான் நோயினால் இறக்கின்றது. வாழ்க்கை வெறுமையாகக் கழிகின்றது. லாப்தேவினது வாழ்வும் அப்படித்தான் இருந்தது. அவன் இடையில் இங்கிலாந்து சென்று வருகின்றான்.

லாப்தேவ் பணத்திற்காகவே நீ என்னைத் திருமணம் முடித்தவள் என்று கூறியதன் பின்னர் யூலியா பணத்தை தனது தகப்பனின் வீட்டில் இருக்கும் போது செலவழித்ததை விடக்குறைவாகவே செலவழிக்கின்றாள். இருவர் மனமும் இணையாத ஒரு தண்டவாளத்தைப்போலவே பயணிக்கின்றது.

லாப்தேவின் குடும்பத்தவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அன்புக்கு ஏங்குபவர்களாகவே இருப்பது புலனாகின்றது. லாப்தேவின் சகோதரி நீனா தனது இருபத்திரண்டாவதுவயதில் பனவூரவ் (இவன் மமதை பிடித்தவன், பூசைவிளக்கில் சிகரெட் பற்றவைப்பான், எல்லாவற்றிக்கும் விஞ்ஞானபூர்வமான விளக்கம் தருவான்; ஆனால் அந்தவிளக்கம் அவனுக்கே உரித்தானது என்கின்றார் சேகவ்) என்பவனைக் காதலித்துத் திருமணம் செய்கின்றாள். அவன் இவளிடத்தில் காதலை வெளிப்படுத்துவதில்லை. அவன் இன்னொரு திருமணம் புரிந்து வாழ்கின்றான். லாப்தேவின் சகோதரி மார்பகப் புற்றுநோயால் அவதியுறும்போது 'இன்பம் என்பதை அறியாத காதலின் விளைவே தனது பிணி' என்றும் 'கண்ணீரும் காதலும் தன் உடல் நலத்தைப் பாழ்படுத்தி விட்டன' என்றும் கூறுகின்றாள். அவள் இறக்கும் தறுவாயில் இருக்கும் போது அவளது சிறியமூத்த மகள் சாஷா தகப்பனைக் கூட்டிவருவதற்காகத் தெருவில் இறங்கி அழுதபடி ஓடுகின்ற காட்சி மனதைக் கொல்கின்றது. பெரியவர்கள் செய்யும் தவறுகளால் அவர்களின் வறட்டுக் கொள்கைகளால் பிள்ளைகள் அனுபவிக்கும் துன்பம் மிகக் கொடியது. லாப்தேவும் அவனது சகோதரனும் வாழ்ந்த சூழலை ஒத்த, அதைவிடக் கடினமான சூழலில் இங்கு எத்தனை பிள்ளைகள் வேதனையுறுகின்றனர். வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர். இவற்றைச் சித்திரிப்பதன் மூலம் சேகவ் எமக்கு அருகில் வந்து எமது மனங்களை ஊடுருவிச்செல்கின்றார்.

இந்நாவல் லாப்தேவ் குடும்பத்தை மையமாக வைத்தே பின்னப்பட்டுள்ளது. அவர்கள் வீடுதேடி வரும் நண்பர்கள், அவர்களின் குணவியல்புகள் (குறிப்பாக சேகவ் அவர்களது நெக்கற்றிவான விடயங்களையும் வெளிப்படுத்தியிருப்பார்.) லாப்தேவ் குடும்பம் தொழிலாளர்களை நடத்தும் முறைகள், அவர்களது கலாரசனை போன்ற விடயங்களையும் வெளிப்படுத்துகின்றது. நண்பர்களைப் பொறுத்தவரையில் கோஸ்த்யா, யார்த்ஸெப், கீஷ் போன்றவர்கள் முக்கியமானவர்கள். கோஸ்த்யா ஒரு வழக்கறிஞர். இவன் லாப்தேவ் குடும்பத்தவர்களால் வளர்த்துப் படிப்பிக்கப்பட்டவன். யார்த்ஸெவ் மொழிநூலில் பட்டம் பெற்றவன். எழுதுவதில் ஆர்வம் உடையவன். கீஷ் இவனை நிரந்தர மாணவன் எனக்குறிப்பிடுவர் (பாடங்களை மாற்றி மாற்றி ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு ஆண்டுகள் இருந்து படித்து மாறுவதால் அப்பெயர் வந்தது) இவனுக்குச் சுத்தத்தில் ஒரு பிரேமை உள்ளது. இப்படி பலவிடயங்களை அவர்களது தனிநபர் உளவியல் பற்றி சேகவ் பேசுகின்றார். அவர்களை மாற்றமுற்று வந்த தனது சமுதாயத்தின் இளையதலைமுறையாகவே சேகவ் படைக்கின்றார். அவர்களும் தங்கள் தனிப்பட்ட உளவியல் பின்னணிக்கு ஏற்ப செயற்படுகின்றனர். கலைபற்றியும் அடிமைகளின் விடுதலைபற்றியும் உரையாடுகின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் லாப்தேவின் தம்பி அவனை நகராண்மைக்கழகத் தேர்தலில் நிற்குமாறு கோருகின்றான். பொதுவெளியில் நோக்குகின்றபோது இவ்வகை யதார்த்தமே வெளிப்படுகின்றது போலும். தனிமனித அடிப்படையில் உளநிலையில் பிளவுபட்டுப் பிணக்குப்படுபவர்கள் பொதுவெளியில் ஒன்றிணைந்து புறப்படுகின்றபோது புரட்சி தோன்றி வெற்றியைத் தந்துவிடுமா? என எண்ணத்தோன்றுகின்றது. தற்சமநிலையற்று இருக்கும் ஒருவன் (லாப்தேவ் உள்ளக முரண்பாடுடைய ஒருவன் அவனால் தனது வீட்டைக் கூடச்சரியாகக் கட்டியெழுப்ப முடியவில்லை. யூலியாவும் கிட்டத்தட்ட இந்த நிலைப்பாட்டில் உள்ளவள்தான்.) தலைவனானால் அவன் தனது நிலையை வைத்தே மற்றவர்களை மதிப்பிட்டு பிரச்சினைகளை உருவாக்கிவிடுகின்றான். வீட்டுக்குமட்டுமல்ல நாட்டுக்கும் அது கேடாக முடிந்துவிடும். இந்த இடத்தில் சோபகீளிஸ் எழுதிய மன்னன் ஈடிப்பஸ் நாடகத்தில் ஈடிப்பஸைப் பார்த்து ட்டைரீசியஸ் கூறும் 'உன் சொந்த வீட்டைச் சீராக்கு' என்ற கூற்று ஞாபகம் வருகின்றது.

குழந்தை பிறந்து இறந்ததும். அதை வெளிப்படுத்தி அழுவதற்குரிய சூழல் கோஸ்த்யாவின் வீட்டிலே உள்ளதாகவே யூலியா கருதுகின்றாள். படிப்படியாக அதில் இருந்து தேறிவரும் யூலியா கணவனது படிப்பறையிலேயே காலங்களிக்கின்றாள். துக்கம் அவளுக்குப் பழக்கமாகிவிட்டது. அதனைத் தொடர்ந்து லாப்தேவின் சகோதரனுக்குப் பைத்தியம் பிடிப்பததனையும் அவனது தகப்பனார் கண்பார்வையற்று பண்டகசாலைக்குள் முடங்கியிருப்பதனையும் கண்டு பண்டகசாலைக்குச் சென்று அதனை மாற்றுவதில் முனைகின்றாள். லாப்தேவையும் அழைக்கின்றாள். அவர்களுக்குள் மனந்திறந்த ஓர் உரையாடல் நடக்கிறது.

அவனும் உடன்பட்டுச் செல்கின்றான். புதியவழிமுறைகளைப் புகுத்தினான். தொழில் புரிவோரைக் கசையால் அடிப்பதைத் தடுத்தான். பண்டகசாலையில் கவனம் செலுத்தினான். தகப்பனாரிடம் இருந்து அதன் இரகசியங்களை அறிந்தான். தமது குடும்பத்தின் சொத்தின் மதிப்பு அறுபது லட்சம் ரூபிள்கள் என்பதை உணர்ந்தான். அந்த இலக்கத்தின் ஞாபகத்தில் தமது பண்டசாலையையும் அண்டைய வீட்டையும்பிரிக்கும் வேலியோரம் அமர்ந்து அங்கிருந்த காட்சியைப் பார்க்கிறான் அது அவனுக்குச் சலிப்பூட்டுகின்றது. அந்த முற்றத்தில் நாய் ஒன்று படுத்திருக்கின்றது.



வேலியருகில் காதலர்கள் இருவர் முணுமுணுப்பதும்முத்தமிடுவதும் கேட்கிறது. லட்சக்கணக்கான ரூபிள்களும் தான் வெறுத்து வந்த தொழிலும் தன்வாழ்வைப் பாழாக்கித் தன்னை முழு அடிமையாக்கி, பின்னர் அதனால் மனம்தளர்ந்து கிழடுதட்டிப் போய்க் கடைசியில் உதவாக்கரையான எல்லா மக்களும் சாவதுபோல தனக்கும் ஏற்பட்டுவிடுமா? எனக் கற்பனை செய்தான். அந்தக் கற்பனையூடு ஒரு கேள்வி பிறந்தது. தான் வெறுக்கின்ற இவற்றைக் கைவிட்டுப் போவதைத் தடுத்தது எது? அப்போது முத்தச் சத்தங்கள் கேட்கின்றன அது அவன் உணர்ச்சியைத்தூண்டுகின்றது என்று எழுதுகின்றார் சேகவ். அவனுக்குச் சுதந்திரமாக ஓடவேண்டும் என்று தோன்றியது ஆனாலும் அவன் இருந்த இடத்தை விட்டு நகராமல் இருக்கின்றான்.

முன்னே ஒரு நாய் சுதந்திரமாகச் செல்வதற்குப் படுப்பதற்கு மென்மையான வயல்வெளிகள் தோட்டங்கள் இருந்தாலும் அது கற்பாளங்களுக்குமேல் படுத்துக்கிடந்தது. அதனைப் பார்த்துத் தன்னைப்போலவே அதற்கு சிறையும் அடிமைத்தனமும் பழகிவிட்டது என்று எண்ணுகின்றான். ஐந்து நாட்களின் பின்னர் தனது மனைவியை, யூலியாவைப் பார்க்கச் செல்கின்றான்.

அவள் தனது பழைய குடையைப்பிடித்துக்கொண்டு அமர்ந்திருக்கின்றாள். 'நீ ஏன் இத்தனை நாட்களாக வரவில்லை' என லாப்தேவ் கையைப்பற்றிக் கொண்டு அவள்கேட்கின்றாள். 'நான் உன்னிடத்தில் காதல் கொண்டுவிட்டேன்' என்கிறாள். அதைக் கேட்டதும் திருமணமாகிப் பத்தாண்டுகள் வாழ்ந்தது போல் ஓர் உணர்ச்சி அவனுக்கு ஏற்படுகின்றது. இன்னும் பதின்மூன்று ஆண்டுகளோ, ஒருகால் முப்பது ஆண்டுகளோகூட வாழவேண்டியிருக்கலாம் என்று எண்ணினான்... அந்தக்காலத்திற்குள் எத்தனையோ பல சம்பங்கள் நிகழக்கூடும். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று யாரறிவார்? பிழைத்திருந்தால் பார்த்துக் கொள்வோம் என்று அவன் நினைப்பதோடு நாவல் முடிகின்றது.

எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கை அந்தக் கூற்றில் தொனிப்பது. லாப்தேவின் மனநிலையில் மாற்றம் என்பது தற்காலிகமானது என்பதையே சொல்லிநிற்கின்றது போலும். முதற்கோணல் முற்றும் கோணல் என்பது போல ஆரம்பகாலங்களில் கொண்ட எண்ணங்களும் அதனால் விதைக்கப்பட்ட கருத்துகளும் நாவினால் சுட்ட வடுக்களாக ஆழப்புதைந்திருந்து சிறுவழி கிடைக்கின்றபோது அதனூடு பீறிப் பெருவெள்ளமாகப் பாயக் காத்திருக்கும்.


எனினும் இத்தனை சிக்கல் கொண்டதா திருமண வாழ்க்கை என்று எண்ணும்போது அது இணைகின்ற தனிமனிதர்களின் ஆளுமையைப் பொறுத்துத் தம்மைக் கட்டமைத்துக்கொள்கின்றது என்றும் எண்ணத் தோன்றுகின்றது. மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் அதன் மொழிச்செழுமையில் இன்னமும் கவனம் செலுத்தப்படவேண்டும் போலத் தோன்றுகின்றது. சாமுராய் வீரன் ஒருவன் சொர்க்கமும் நரகமும் எங்கே இருக்கின்றது என்று ஜென் துறவி ஒருவரிடம் கேட்கின்றான். அவர் அவன் வீரத்தினைக் கண்ட படி தாழ்த்திப்பேசுகின்றார்.

அவன் கோபத்தில் தனது வாளை உருவுகிறான் துறவியை வெட்டுவதற்கு, துறவி இப்பொழுது நரகத்தின் வாசல் திறக்கின்றது என்கிறார். அவன் தனது வாளை உறையுள் போடுகின்றான். இப்பொழுது சொர்க்கத்தின் வாசல் திறக்கின்றது என்கிறார் துறவி. மூன்றாண்டுகள் சொர்க்கமா, நரகமா அதைத் தீர்மானிப்பது உங்கள் கைகளில் ஆனால் சேகவின் 'மூன்றாண்டுகள்' முழுதும் உண்மை.

*(நன்றி:கலைமுகம் 2017)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப.துளசிகன்
தரம் - 3B
யா/இந்து ஆரம்பப் பாடசாலை




சு.கேதுகன்
தரம் - 4A
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி





பி.ஜீவிதா
தரம் - 3
யா/ மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை



மு.பூர்ணிகா
தரம் - 3
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



டன்சிகா.சி
தரம் - 6E
யா/இந்து மகளிர் கல்லூரி



V.கவிவருண்
தரம்- 6
யா/ஹாட்லிக் கல்லூரி



**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# நாவினால் சுட்ட வடு

ஒரு முன்கோபக்கார சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் கடுங்கோபம் வரும்.

கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்தபடி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசிவிடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப்படுவான்.

நாளடைவில் அவனைச் சுற்றுவட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். அந்தச் சிறுவனுக்கு தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.


அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்துவிட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை கோபம் வரும்போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்துவிட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவேலியில் ஓர் ஆணியை ஆத்திரம் தீரும்வரை அறைந்து ஏற்றிவிடும்படி அறிவுறுத்தினார். முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாள்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போகவேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்துபோய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாள்களில் வேலியில் ஆணி அடிக்கவேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒருநாள் பிடித்தது.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியைப் பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவதுபோல் நீ பேசியதற்கு மன்னிப்புக்கேட்டாலும், அந்தச் சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக்கூறினார். மகனும் தன் தவறை உணர்ந்து ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.




## விடுகதைகள்

ஒரு குகை, 32 வீரர்கள், ஒரு நாகம் அந்தக் குகை எது?
வாய்

கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
கரும்பு

உயரத்தில் இருப்பிடம் தாகம் தீர்ப்பதில் தனியிடம் அது என்ன?
இளநீர்

அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன?
அம்மி குளவி

மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம் அவன் யார் ?
சிலந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org